# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"


12 JUL 1973
MADRAS



மாவடிச் சோமாஸ்கந்தர்,
திருக்கச்சி ஏகம்பம், காஞ்சிபுரம்

மாலை 11] கீலக - மாசி - மார்ச்சு 1969 [மணி 6

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



அம்பாசமுத்திரம் ஸ்ரீ அகத்தீசுவர சுவாமி தேவத்தானத்தின் அறங்காவலர் திரு. சிவ. ராம. அ. நடராச முதலியார் அவர்களிடம், நமது அறநிலைய ஆணையர் அவர்கள், ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், வெள்ளிச் சுழற்கோப்பைப் பரிசு வழங்கிச் சிறப்பித்தல்.(6-1-69)

## பொருளடக்கம்


1. இறைவழிபாடும் திருவள்ளுவரும்
2. எண்குணத்தான்
3. இராமலிங்கரும் திருக்குறளும்
4. கடவுளுணர்ச்சி
5. வேத விழுப் பொருள்
6. அபிராமி அந்தாதி
7. சிவராத்திரி விரதச் சிறப்பு
8. திருவேற்காடு
9. சிறுவரம்பேடு
10. மகாபாரதம்
11. புந்தியிற் புகுந்தான்
12. பக்தியின் தத்துவம்
13. விழுமிய விமானம்
14, வெந்தயத்தின் மேன்மை


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




மாலை 11] கீலக - மாசி - மார்ச், 1969 [மணி 6

# இறைவழிபாடும் திருவள்ளுவரும்

**முன்னுரை :**

திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானவர். எல்லோரும் உடன்படத் தக்க பொதுவான உண்மைகளையே எடுத்துக் கூறிப் போதித்தவர். ஆயினும், அவர் இறைவன் ஒருவன் உண்டு என்றும், அவ் இறைவனை நாம் அனைவரும் வழிபடுதல் வேண்டும் என்றும், அங்ஙனம் வழிபடுதலே நம்மனோர் வாழ்க்கைக்கு நலம் பயப்பது என்றும் உறுதியாக நம்பினார். இறையுண்மையை உடன்படாத ஒரு சிலரின் உளம் புண்படக் கூடுமே என்று அஞ்சி, அவர் தமது கொள்கையினை வலியுறுத்திக் கூறாமல் நெகிழ்ந்து சென்றிலர். மனித குலத்தின் நல்வாழ்விற்கு இறை வழிபாடு மிக மிக இன்றியமையாதது என்று, அவர் பெரிதும் வற்புறுத்திச் சென்றுள்ளார்.

இறையுணர்வு : ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய உணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடிசாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறு உடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம், முடிவில் நிலைபேறு இன்றி அழிந்து மறைந்து போதலை, நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும், நாளடைவில் தேய்ந்து மாய்ந்து அழிந்து போகின்றன.

பெருத்த துன்பங்களும் தொல்லைகளும் நேருங்கா லெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணர வேண்டியவன் ஆகின்றான். யாவும் தம்மாலேயே தம் ஆற்றலுக்குப் பணிந்து நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்கும் மாவேந்தர்களும் பிறரும், தம்மாட்டு நிகழும் காம வெகுளி மயக்கங்களும் பிறவும் தம்மை ஆட்டிப் புடைத்து அலைக்கழிப்ப, அவற்றிற்குத் தாம் அடங்கி நின்று அல்லற்பட்டு 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கின்றனர்.

தம்முடைய அறிவும் முயற்சியும் பிறவும் ஒருவரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாதபேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய பரம்பொருளின் துணையை அடைய, மனிதன் பெரிதும் ஆவல் கொண்டு அலைந்தெய்த்து ஏக்கற்றுத் துடிக்கின்றான்.

நாம் விரும்பி எதிர் பார்ப்பது ஒன்றாக, நிகழ்வதோ பிறிதொன்றாக அமைந்து விடு

கின்றது. எத்துணை உயர்ந்த செல்வம் செல்வாக்குகளைப் பெற்றுச் சிறந்த நிலையில் வதிபவரும், தம்முடைய நிலையில் உளநிறைவு எய்துகின்றிலர். மனித மனம் ஆரா இயற்கை அவா மிக்கதாகத் திகழ்கின்றது. ஒரு பொருளைப் பெருதொழிந்த வழி நேரும் துன்பம்போலவே, அப் பொருளைப் பெற்ற வழியும்கூட நிறைவு பெருமல், ஏதேனும் ஒரு வகையில் மனம் துன்புறுகின்றது. மணிமேகலை என்னும் செந்தமிழ்க் காப்பியம் கூறுமாறு போல, மக்கள் வாழ்க்கையானது "அவலக் கவலை கையாறு அழுங்கல் தவலா உள்ளம் தன்பால் உடையது" என்பதில் ஐயமில்லை.

**வாழ்வும் கவலையும் :** உலகில் மக்களாகப் பிறந்தார் அனைவருக்கும் ஏதேனும் ஒரு கவலை இல்லாமற் போகவில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒவ்வொரு கவலை இருக்கத்தான் செய்கின்றது. கவலை இல்லாதவர்களை உலகத்திற் காண்டல் மிக மிக அரிது.

"அன்ன விசாரம்! அதுவே
விசாரம்! அதுவொழிந்தால்
சொன்ன விசாரம்! தொலையா
விசாரம்! நற் றேகையரைப்
பன்ன விசாரம்! பலகால்
விசாரம்! இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய்!
இறைவா கச்சி ஏகம்பனே!

எனமுற்றத்துறந்தபட்டினத்தடிகள்தாமும், மனித வாழ்வின் முடிவிலா விசாரம் ஆகிய கவலைகள் பற்றி மொழிந்தருள்கின்றார்!

"பாலுக்குச் சர்க்கரை இல்லை
என்பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லை
என்பார்க்கும், முட்குத்தித் தைத்த
காலுக்குத் தோற்செருப்பு இல்லை
என்பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை
என்பார்க்கும், விசனம் ஒன்றே"

எனவரும் தனிப்பாடல், எவ்வளவு உயர்ந்தவர்கட்கும் அவரவர்கள் நிலையில் ஏதேனும் கவலைகள் இருத்தலை அழகுற உணர்த்துகின்றது.

**மனவியல் நூலறிஞர் :** வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் மனக் கவலைகளைப் போக்கிக் கொள்ளச் சமய உணர்வும் கடவுள் நம்பிக்கையுமே பெரிதும் துணை புரிகின்றன. இறைவனை வழிபடுவதன் மூலம், நம் கவலைகள் பலவும் எளிதில் தீர்கின்றன. நாம் நம் கவலைகளை நீக்கிக் கொள்ளுதற்குரிய நேரிய செவ்விய வழி, இறைவனின் திருவடிகளைச் சரண் அடைதல் ஒன்றேயாகும். நம் நாட்டுச் சான்றோர்கள் அனைவரும் நமக்கு அறிவுறுத்திக் கூறிச் சென்றுள்ள இவ்வுண்மையினை, இந்நாளில் உலகப் புகழ் பெற்றுள்ள மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் உடன்பட்டுக்கூறத் தலைப்பட்டுள்ளனர். உலகப் புகழ் பெற்ற மன இயல் நூல் அறிஞர் ஆகிய பேராசிரியர் சி. ஜி. யங் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார் :

"கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில் — அதாவது முப்பத்தைந்து வயதுக்கு மேல் — தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப்பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை.

அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவு ஆகிய உணர்ச்சியை, அவர்கள் பெருமல் இழந்து விட்டமையே ஆகும். மீண்டும் சமய உணர்வு கைவரப் பெருமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணி தீரப் பெற்றிலர்."( 1 )

---

(1) "During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me...

Among all my patients in the second half of life, that is to say, over thirty-five years, there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life...

It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook"

—*Prof. Carl Gustav Jung,*
Modern Man in Search of a Soul, P. 264.

**பிற பெரியோர்கள் :** "யார் உண்மையிற் சமய வுணர்வோடு இருக்கின்றார்களோ, அவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படுவதில்லை"[2] என டாக்டர் ஏ.ஏ. பிரில் என்பவர் கூறுகின்றார். "மனிதர்களை வாழ்விக்கும் ஆற்றல்களுள் கடவுள் நம்பிக்கை என்பது ஒன்று. அது முழுவதும் இல்லாமற் போகுமாயின், வீழ்ச்சியையே குறிக்கும்"[3] என வில்லியம் ஜேம்ஸ் என்பவர் விளக்குகின்றார். "கடவுள் வழிபாடு செய்யாமல் இருப்பின் நான் எப்போதோ பைத்தியக்காரன் ஆகி விட்டிருப்பேன்"[4] எனக் காந்தியடிகள் கட்டுரைத் திருத்தலை நாம் உணர்வோம். இவ்வாறே உலகப் புகழ்பெற்ற மற்றொரு பேரறிஞர் ஆகிய **பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்** என்னும் தத்துவ–கணித மேதை கூறுவதும் ஈண்டுக் கருதியுணரற் பாலது.

"நம் கால நிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன. நம் கால நிலையில் அருளுணர்வும், 'மனித இனம் இன்பமாக வாழவேண்டும்' என்னும் விருப்பமும், தேவைப்படுகின்றன. எல்லாவற்றினும் மேலாகத் திடமான நம்பிக்கையும், புதியன படைத்தலில் துடிதுடிப்பும், இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகும்.

நான் கூற முற்படும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும் மிகப் பழமை முறையில் அமைந்ததுமான ஒன்றேயாகும். நான் கூறத் தலைப்படுவது மிகமிக எளிமையும், பழமை முறை வாய்ந்ததாக இருத்தலும் பற்றி, ஒரு சிலர் என்பாற் புன்முறுவல் பூத்து, என்னை ஏளனம் செய்யக்கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்குக் கூடத் தயங்கி, நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன்.

நான் கருதும் பொருள் — அதனைக் குறிப்பிடுவதற்காக அருள்கூர்ந்து என்னை மன்னித்துவிடுங்கள்! — அன்பு, 'கிறித்தவ அன்பு' அதாவது சமய உணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும்.

இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்."[5]

## முடிவுரை :

இவ்வாற்றால் மனித வாழ்க்கைக்குக் கடவுளுணர்ச்சி எவ்வளவு இன்றியமையாதது என்றும், தனக்கு உவமை இல்லாதவனாகிய கடவுளின் திருவடிகளைப் பற்றுக்கோடும் புகலிடமுமாகக் கொண்டு, அடைக்கலம் புகுந்து தொழுது வழிபட்டாலன்றி நாம் நமது மனக் கவலைகளை மாற்றல் அரிது என்றும் உணரலாம். இதனையே திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெரிதும் வற்புறுத்தியுள்ளார்.

"தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

இங்ஙனம் திருவள்ளுவர் பெருமான் வற்புறுத்தி விதித்து, அறிவுறுத்திச் சென்ற இறை வழிபாட்டின் இன்றிமையாமையும் சிறப்பும் உணர்ந்து, நாம் இறையுணர்வும் வழிபாடும் கடைப்பிடித் தொழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ முயலுவோமாக!

—ஆசிரியர்.

(2) "Anyone who is truly religious does not develop a neurosis"

*—Dr. A. A. Brill.*

(3) "Faith is one of the forces by which men live, and the total absence of it means collapse"

*—Prof. William James.*

(4) "Without prayer, I should have been a lunatic long ago"

*—Gandhiji.*

(5) *"There are certain things that our age needs and certain things it should avoid. It neees compassion, and a wish that mankind should be happy; it needs, above all, courageous hope and the impulse of creativeness.

The root of the matter is a very simple and old fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of derisive smile with which wise cynics will greet my words.

The thing I mean—please, for give me for mentioning it—is love, Christian love, or compassion.

If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an imperative necessity for intellectual honesty"

*—Dr. BERTRAND RUSSELL,*
*Impact of Science on Society P. 114.*

# எண்குணத்தான்

**முன்னுரை :**

சிறந்த இலக்கியங்கள், தம்மை ஆழ்ந்து கற்குந் தோறும், கற்பார்க்குப் பல நுண்மைப் பொருள்களை விளக்கும் தன்மை வாய்ந்தன; நவில் தொறும் அந்நூல்களின் நயம் பெருகும்; தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல, அவற்றைக் கற்றனைத்தும் அறிவு ஊற்றெடுக்கும். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்றபடி அரிய பெரிய சிறந்த இலக்கியங்களைப் பயிலப்பயில, புதியபுதிய பொருள் உணர்வும் அனுபவமும் தோன்றிக்கொண்டே இருக்கும்.

நல்ல இலக்கியங்கள் என்பன உணர்த்திக் கொண்டு செல்லும் பொருட்டிறன்களுக்கு ஓர் எல்லையே இல்லை எனலாம். "இதுவா அல்லது அதுவா என்ற நிலையில் இல்லாமல், இதுவும் அதுவும் பிறிதும் என்ற முறையில் அவற்றின் பொருட் குறிப்பானது பரந்து விரிந்துகொண்டே செல்லும்"*

**கடலில் முத்து :** இலக்கியம் என்பது, ஒரு பெருங்கடல். கடலைப்போலவே இலக்கியங்களும் மிக்க பரப்பும் ஆழமும் உடையவை. கடலின் அடியில் முத்துக்கள் மறைந்து கிடத்தல்போல, இலக்கியங்களின் உள்ளேயும் இனியசிறந்த கருத்துக்கள் நிரம்பிச் செறிந்து திகழும். கடலின் அடியில் உள்ள முத்துக்களைப் பெற விரும்புவோர், அதன் அடியிற் சென்று அரும்பாடுபட்டு அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, மேலே கரையிற் கொணர்ந்து பரப்பிப் பலருக்கும் விற்று மகிழ்வர். இலக்கிய அறிஞர்களும் சுவைஞர்களும் ஒருவகையில் முத்துக் குளிப்பவர்களைப் போன்றவர்களேயாவர். இவர்களும் கவிதை அல்லது இலக்கியங்களின் ஆழத்திற்குச் சென்று, இனிய சிறந்த நல்ல பல கருத்துக்களை நுணுகி ஆய்ந்து கண்டுணர்ந்து, பிறருக்கும் எடுத்துச் சொல்லி விளக்கி மகிழ்ச்சி விளைவிக்கின்றனர். இலக்கியக் கடலில் திளைத்து மூழ்கி ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்தால் தான், நாம் அரியபல அழகிய நல்ல கருத்துக்களை உணர்ந்து கொண்டு பயன்பெற முடியும்.

**கச்சியப்பர் :** இவ்வுண்மையை உணர்ந்தே, கல்வி நலனிற் சிறந்து கவி பாடும் திறனில் வல்ல கச்சியப்ப முனிவர் என்னும் கவிஞர் பெருமான், இலக்கியச் சுவைஞர்களின் இயல்பைக் கடலில் முத்துக் குளிப்பவர்களின் செயலுக்கு ஒப்பிட்டுப் பின்வரும் பாடலிற் கூறுவாராயினர்.

> " ஆழ்ந்து பெருநூல் இடைக்கிடந்த
> அரிய பொருளைப் பலர்கவர
> வாழ்ந்த கருத்திற் பேரறிஞர்
> வகுத்து விளக்கும் வகைபோன்று
> வீழ்ந்த கருத்தின் நுளையர்குழாம்
> வில்லிட் டிலகும் மணிபலவும்
> தாழ்ந்த நெடுநீர்க் கடற்குளித்துத்
> தடவுக் கரைஎங் கணுநிரைப்பார்"
>
> —திருவானைக்காப்புராணம்.

* "Words do not have **either—or** meanings in imaginative poetry: they have **and—and—and** meanings. That is how poetry works."

**—Hilary Corke.**

ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறளில், 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியில் 'கோளில்பொறியிற் குணம் இலதுவே எண்குணத்தான் தாளை வணங்காத்தலை' எனவரும் திருக்குறளை யாவரும் அறிவர். அதன்கண் பயின்றுள்ள 'எண்குணத்தான்' என்னும் இனிய தொடரை ஆராயத் தலைப்பட்டால், கடலிற் குளித்து முத்துக்களை எடுப்பார் போன்று, நாமும் பற்பல விழுமிய நல்ல கருத்துக் களைக் கண்டுணர்ந்து களித்துப் பயன் பெறலாம்.

**பரிமேலழகர் :** உரையாசிரியர்களுள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய்ச் சிறந்து ஒளிரும் ஆசிரியர் பரிமேலழகர், "எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வின னாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது" எனவிளக்கம் கூறியருளினர்.

இங்ஙனமே வைணவ சமயப் பெரு மக்கள், நல்வினை தீவினை ஆகிய இரண்டும் இன்மை, மூப்பின்மை, இறப் பின்மை, துக்கமின்மை, பசியின்மை, தாகமின்மை, விரும்பியதனைத் தவறுமற் பெறுகை, நினைத்ததனை நிறைவேற்றுந் தன்மை என்னும் எட்டுக் குணங்கள் திரு மாலுக்கு உண்டு எனக் கூறுவர்.

அருகதேவனை வழிபடும் ஆருகதர் ஆகிய சமணர்கள், 'எண்குணத்தான்' என்னும் இத்தொடருக்கே, கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா ஆற்றல், கடையிலா இன்பம், பெய ரின்மை, குடியின்மை, ஆயுவின்மை, அழி வின்மை என்னும் எட்டுக் குணங்களை யுடையவன் என்று பொருள்கொள்வர்.

**எண்குணத்தான் :** எனினும் 'எண் குணத்தான்' என்னும் தொடர், வேறு பிற பொருள்களையும் கூட உணர்த்துவதாக உள்ளது. அவற்றை ஒருசிறிது ஈண்டுக் காண்போம்.

(1) 'சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்று சான்றோர்கள் பலரும் அருளிச் செய்திருத்தலின், 'எண்ணி எண்ணி வியந்து உணர்ந்து மகிழ்தற்கு உரிய குணங்களை உடையவன்' எனவும், நாம் இத்தொடர்க்குப் பொருள் கொள்ளலாம்.

(2) "அடியார்க்கு அருள்செய்யவருந்தி நம்பி" எனவும், "கள்ளத் தலைவர் துயர் கருதித் தம்கருணை வெள்ளத்து அலைவர் மிக" எனவும் அருளுரைகள் காணப் படுதலின், இவ்வுயிர்த் திரள்கள் எல்லாம் ஈடேறி யுய்தல் வேண்டுமே என்று தன் பேரருட் பெற்றியினால், 'எண்ணி எண்ணி இரங்கி அருள்கின்ற குணத்தையுடைய வன்' எனவும் இத்தொடர்க்கு நாம் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

இக் கருத்துக்களையே ஒருவகையில் தாமும் கொண்டவர்போலக் காளிங்கர் என்னும் உரையாசிரியர், இத் தொடருக்கு 'எண்ணப்பட்ட குணங்களை யுடையவன்' என உரை எழுதியிருக்கின்றார்.

(3) 'எண்பதத்தால் எய்தல் எளிதென்ப' (குறள் 991) என்புழி, எண்மை + பதம் என்பது எண்பதம் என்றாயவாறு போல, எண்மை + குணத்தான் என்பது, எண் குணத்தான் என்றாகிவரும் எனக்கொண்டு, 'எளிமைத்தன்மையைத் தனது இயல்பான குணமாக உடையவன்' என்று இத்தொ டர்க்குப் பொருள் கூறுதலும் ஒருவகை யில் ஏற்புடைத்தாகும்.

"தெளிவந்த தேறலைச்
சீரார் பெருந்துறையில்
எளிவந்து இருந்திரங்கி
எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப்
பாடுதுங்காண் அம்மானாய்"
"அருமையில் எளிய அழகே போற்றி"

என மாணிக்க வாசகர் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் பலரும், திருவாய் மலர்ந் தருளியுள்ள திருப்பாடல்கள் பலவும், இக் கருத்துக்கு அரண்செய்கின்ற மேற்கோட் சான்றுகளாகவிளங்கும். இராமகிருஷ்ணாதி அவதாரங்களும், அர்ச்சைகளும் இறை வனின் எளிமைத்தன்மை (சௌலப்பியம்) ஆகிய இனிய பண்பினையே உணர்த்து

வனவாகத் திகழ்தலும், ஈண்டுச் சிந்தித்துத் தெளிதல் தகும்.

(4) இனி, வேறொரு வகையாகவும் இத் தொடரின் பொருளை யாவரும் எண்ணி யுணரலாம். இக் குறள் 9ஆம் குறளாக அமைந்திருத்தலின், மேலேகூறி வந்த 8 குறள்களாலும் சுட்டப்பெற்ற குணங்களை யெல்லாம், இக் குறளின்கண் தொகுத்துணர்த்தி முடித்துரைத்தார் ஆசிரியர் எனவும் கருத இடன் உளது. அங்ஙனம் கொள்ளின்,

1. ஆதி பகவன் ஆதல்.
2. வாலறிவுடைமை.
3. மலர்மிசை ஏகுதல்.
4. வேண்டுதல் வேண்டாமை இன்மை.
5. இருள்சேர் இருவினையும் சேராமை.
6. பொறிவாயில் ஐந்தவித்தல்
7. தனக்குவமை இன்மை
8. அறவாழியாம் அந்தண்மை.

என்னும் மேலை எட்டுக் குணங்களையுமே, இத்தொடர் தொகுத்துணர்த்திச் சுட்டி யுரைத்தாகத் துணியலாம்.

**மணிவாசகர் :** (5) மாணிக்கவாசகர், இறைவனின் அருமை பெருமைகளையும் அருளிச் செயல்களையும் விதந்து வியந்து பாடி மகிழும் தமது திருவாசகத்தில்,

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப்
புணர்ந்து நின்றான்
உலகேழெனத் திசைபத்தெனத் தான்
ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ"

என அருளிச் செய்துள்ள அருமைச் செய்யுளின்கண், இறைவனை 'எண்வகை யாய்ப் புணர்ந்துநின்றான்" எனக் குறிப்பிடுகின்றார். 'எண்குணத்தான்' எனத் திருவள்ளுவர் வழங்கிய தொடர்க்குரிய பொருளை விளக்குவது போலும் முறையில், மாணிக்க வாசகரின் 'எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்' என்னும் அரிய தொடர் அமைந்து காணப்படுகின்றது. இந்த இருதொடர்களையும்இயைபுபடுத்தி எண்ணி ஆராயுங்கால், இறைவனின் 'அட்ட மூர்த்தம்' பற்றிய கருத்தை ஈண்டு நாம் கொள்ளுதலும் பொருத்தமாகும் எனத் தோன்றுகின்றது.

**அட்டமூர்த்தம் :** "நான்முகனது முதற் படைப்பான நீரும், விதிப்படி தரப்படுகின்ற அவிப்பலியைத் தாங்குவதான தீயும், அவியைத் தருகின்றவனான இயமானனும், காலத்தை வரையறுக்கின்ற ஞாயிறு திங்களும், செவிப்புலனாகின்ற ஓசைக்கு நிலைக்களனாய் எங்கும் ஊடுருவி நிற்கும் விசும்பும், எல்லா வித்துப்பொருள்களையும் தன்கண் தோற்றுவிக்கின்ற நிலனும், எல்லா உயிர்களும் மூச்சு விடுதற்கு ஏதுவான காற்றும், என்கின்ற எண்வகை வடிவங்களுடன் விளங்கும் முதல்வனான சிவபெருமான், உங்களைக் காக்கக் கடவன்" எனச் சாகுந்தல நாடகத்தின் தொடக்கத்திற் காளிதாசர் பாடியிருத்தலும் இங்குக் கருதுதற்கு உரியது.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய் அட்ட மூர்த்தி ஆகி"
—திருநாவுக்கரசர்.

"எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்
கொண்டே நின்றார்
விட்டார் உலகமென் றுந்தீபற
வீடே வீடாகுமென் றுந்தீபற"
—திருவுந்தியார்.

என்பன போலவரும் திருமொழிகள் பலவும், இக்கருத்தினை வலியுறுத்தும்.

"தீவளி விசும்பு நிலன்நீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும் அறனும்......"

எனவரும் பரிபாடல் வரிகள் (3:4:5), சிவபெருமான் மட்டுமே யன்றித் திருமாலும் அட்ட மூர்த்தியாக அமைந்து திகழ்தலை அறிவிக்கும்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறிவந்த வாற்றால் 'எண் குணத்தான்' எனத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வழங்கியருளிய தொடர், எத்துணை ஆழ்ந்த பல பொருட் குறிப்புக்களை உடையதாகத் திகழ்கின்றது என்பதனை யாவரும் இனி துணரலாம்.

ஆழ்ந்து நுணுகி ஆராயுந்தொறும் அரிய பல கருத்துக்களை மேன்மேலும் அளிக்கவல்ல, திருக்குறள் போன்ற இத்தகைய சிறந்த செந்தமிழ்த் தெய்வீக நூல்களைத் திறன்தெரிந்து ஆழ்ந்து நுணுகிக் கற்பது, நம்மனோர்க்குத் தலையாய கடமையாகும். இறைவன் திருவருள் அங்ஙனம் ஆழ்ந்து கற்று இன்புறும்படி நம்மனோர்க்குத் துணை புரிவதாக.

—ஆசிரியர்.

# இராமலிங்கரும் திருக்குறளும்

## முன்னுரை :

தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ள சான்றோர்களில், இராமலிங்க அடிகள் ஒருவர். திருவருட்பா என்னும் செந்தமிழ்த் தெய்விகப் பனுவலைப் பாடியருளிய, அவர்தம் சிறப்பு அளப்பரியது. சமரச சன்மார்க்கம் என்னும் சான்ருண்மை நெறியினைப் பரப்பியருளிய இராமலிங்கர், மிகவும் சிறப்பாகக் கொண்டு போற்றி மகிழ்ந்த நூல்கள் ஒரு சில. அவற்றுள் திருக்குறளும் ஒன்று.

## திருவள்ளுவர் :

இராமலிங்கரின் உள்ளம் கவர்ந்த நூல்களுள் திருக்குறள், சிறப்பிடம் பெறுகின்றது. திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர்க்கும், திருவருட்பாப் பாடிய இராமலிங்கர்க்கும் இடையே, பல பண்பு ஒப்புமைகள் காணப்படுகின்றன. திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுப்படத் தமது நூலை இயற்றினர். இராமலிங்கரும் எல்லாச் சமயத்தாரையும் பொது நெறிப் படுத்த விழைந்து, சமரசசன்மார்க்க நெறியினைப் பரப்பித் திருவருட்பாப்பாடினர். 'ஒன்ருக நல்லது கொல்லாமை' எனத் திருவள்ளுவர் வற்புறுத்திய கொல்லாமையாகிய நல்லறத்தினையே, இராமலிங்கர் 'சீவகாருண்யம்' என்னும் சிறந்த ஒழுக்கமாக அறிவுறுத்திப் போந்தனர். 'அற்ருர் அழிபசி தீர்த்தல்: அஃதொருவன் பெற்ருன் பொருள்வைப் புழி' எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டதனையே, இராமலிங்கர் ஏழைஎளிய இரவலர்களின் பசிப் பிணியகற்றும் அறச்செயலாகப் பெரிதும் விதித்துப் பரப்பியருளினர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனத் திருவள்ளுவர் கூறியதனையே, 'ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை' என இராமலிங்கர் இயம்பியருளினர்.

## திருக்குறள் :

இராமலிங்கர்க்குத் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின்பால் இருந்த பெருமதிப்பும் ஈடுபாடும் எல்லையற்றன. தமது திருவருட்பாவில் "நெஞ்சறிவுறுத்தல்" என்னும் பகுதியில் இராமலிங்கர் பல திருக்குறள்களை மேற்கோளாக எடுத்தாளுகின்ருர். தமது நெஞ்சிற்குக் கூறுவது போல அமைத்து, உலக மக்களுக்கு அறிவுரை கூறுகின்ற அவர், திருக்குறளினின்றே பல சிறந்த கருத்துக்களை எடுத்துக்காட்டுகின்ருர் :—

(1) கோபம் மிகவும் கொடியது. சில இடங்களில் நம்முடைய கோபம் செல்லும். சில இடங்களில் செல்லாது. நம்மை விடத் தாழ்ந்த எளியவர்களிடத்தில் நமது கோபம் செல்லுபடி ஆகும். நம்மைவிட உயர்ந்தவர் அல்லது வலிமை மிக்கவர்கள் பால் நம் கோபம் செல்லுபடி ஆகாது. நம்மைவிட வலிமை மிக்கவர்களிடத்தில் நாம் கோபம் கொண்டால் அது நமக்குத் தீங்கு பயப்பதாகவே முடியும். செல்லுபடி ஆகக்கூடிய இடத்திலும் நாம் கோபம் கொள்ளாதிருத்தலே நல்லது. ஏனென்ருல் அந்த இடத்திலும் கூட, நமக்குக் கேடு விளைவிக்க வல்லது, அதனைப் போல்வது பிறிது எதுவும் இல்லை.

(2) ஒருவன் தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள விரும்புவானுகில், கோபம் வராமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால்

கோபம் கொள்ளுகின்றவனை அக்கோபமே கொன்றுவிடும்.

(3) நம்மை ஒருவர் இழித்துரைத்துப் பழித்தாலும், நாம் பொறுத்துக்கொள்ளுதல் நல்லது. பூமியானது தன்னைத் தோண்டிப் பலவகைகளில் கொடுமை புரிபவனையும் வெறுக்காமல் தாங்கி நன்மை புரிகின்றது. அதுபோல நம்மைப் பழிப்பவர்களைப் பொறுத்துக் கொள்ளுதலே நமக்கு மிகவும் சிறப்பாகும்.

(4) வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் மாறி மாறி, இடைவிடாதும் எண்ணின்றியும் வந்துகொண்டிருக்கும். வாழ்க்கை நிலையில்லாதது. இறப்பானது உறக்கத்தைப் போன்றது. பிறப்போ, உறங்கியிருந்து கண்விழித்துக் கொள்வதைப் போன்றது.

(5) நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லையாய் இறந்துபோய் விட்டான், என்று கூறுகின்ற இழிவையே ஒருவகைப் பெருமையாகக் கொண்டிருப்பது இந்த உலகம். சிறிதளவும் நிலையில்லாத தன்மை இவ்வுலகத்தின் பண்பு.

(6) பற்று அற்றவன் ஆகிய ஞானசிரியன் அல்லது கடவுளின் திருவடிகளையே துணையாகச் சிக்கெனப் பிடித்துக் கொள்க; அங்ஙனம் பிடித்துக்கொள்ளுவது தான், நம்முடைய பற்றுக்கள் நீங்குதற்குரிய நல்ல உபாயம் ஆகும்.

(7) ஒரு நகரத்தின் ஒரு பெரிய மன்றத்தில், நாடகம் ஒன்று நிகழத் தொடங்குகின்றது என்றால், மக்கள் சிறிது சிறிதாகப் பல மணி நேர அளவில் வந்து கூடுவார்கள். ஆனால் நாடகம் முடிந்ததுமே, ஒரு சில நிமிடங்களுக்குள் அத்தனை பேரும் திரளாக ஒருங்கு சேர்ந்து அங்கிருந்து வெளியேறிச் சென்று விடுவர். அதுபோன்று செல்வம் சேரும்போது நெடுங்கால அளவில் சிறுகச் சிறுகவே சேரும்; ஆனால் அழியும் போதோ பெரிய அளவில் ஒரேயடியாக விரைவாக நீங்கி விடும். அங்ஙனம் நிலையில்லாத இயல்புடையது செல்வம்.

**நெஞ்சறிவுறுத்தல் :**

இங்ஙனம், ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான், தமது திருக்குறளில் அறிவுறுத்திச் சென்றுள்ள அழகிய சிறந்த கருத்துக்களைத் திருவருட்பிரகாசவள்ளலார் ஆகிய இராமலிங்க அடிகளார், நயந்தினிது எடுத்துப் போற்றியருளுகின்றார். "முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுதல்" செந்தமிழ்ச் சான்றோர்களின் சிறந்த பண்பு. அம்முறையினை இராமலிங்க அடிகளாரும் கடைப்பிடித்துக் காட்டியருளியமைக்குக் கீழ் வரும் பகுதிகள் நல்ல சான்றுகள் ஆகும்.

"செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயது என்ற தெண்ணிலையே" (1)

'தன்னைத்தான் காக்கிற் சினம்காக்க என்றதனைப்
பொன்னேபோற் போற்றிப் புகழ்ந்திலையே" (2)

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னும்
திகழ்வாய் மையும்நீ தெளியாய்" (3)

'உறங்குவது போலும்என்ற ஒண்குறளின்வாய்மை
மறங்கருதி அன்றோ மறந்தாய்" (4)

'நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய்" (5)

"பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது
பற்றற்றால் அன்றிப் பலியாதால்" (6)

"கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலும் என்ற
சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே" (7)

**முடிவுரை :**

திருவருட்பாவில் நெஞ்சறிவுறுத்தல் என்னும் பகுதியில், இங்ஙனம் பல திருக்குறள்களை இராமலிங்கர் எடுத்துக் கையாண்டிருப்பதும், "ஒண்குறள்" "சீர்த்தாட்குறள்" "வாய்மை" என்னும்அடைமொழிகளாற் புகழ்ந்தோதியிருப்பதும், இராமலிங்கருக்குத் திருக்குறள்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது விளக்கும். இத்தகைய பெருநலஞ்சான்ற திருக்குறளை நாம் அனைவரும் நலமுறக் கற்கவும், அதன்வழிநிற்கவும் முயன்று, உய்வோமாக !

—ஆசிரியர்.

# கடவுளுணர்ச்சி

உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கடவுள் உணர்ச்சியென்பது என்றுமே இருந்து வந்திருக்கின்றது. மனிதனுக்குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள், கடவுள் பற்றிய உணர்ச்சிக் கூறும் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. நாகரிகம் எய்தப் பெறாத காட்டு மக்கள் முதல், நாகரிகத் துறையில் நனி சிறந்த மேன் மக்கள் ஈறாக, அனைவருக்குமே அவரவர்களின் நிலைக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பக் கடவுள் உணர்ச்சி அமைந்து விளங்கி வரக் காண்கின்றோம். மனித குலம் தோன்றிய காலம் முதல் இயல்பாகவே எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தினர்களிடையும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் நிலவி வருகின்றன.

இவ்வுலகில் உள்ள சூரியன் சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணில்லாத விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கியுயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும்போன்ற பூதங்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள் என்பவற்றின் இயல்பையெல்லாம் எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு கட்டாயம் உண்டாகும். உலகப் படைப்பின் திறமும் இயற்கையும் எத்துணை வியக்கத் தக்கனவாக இருக்கின்றன. சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண் மீன்கள் இரவிலும் தோன்றித் தத்தம் ஒழுங்குமுறைகள் தவறாமல்ஒளிவீசிஉழன்றுகொண்டுவருகின்றன. பரந்த பெருங் கடலின் நீரை முகந்து கொண்டு பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள்மழைபொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்துபொங்கி விடாமல் ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின்பனிக்காலம் எனப் பல வேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக்காலங்களுக்கு ஏற்ற மரம்செடி கொடி மூலிகைவகைகளை உண்டாக்கி வளர்த்தும் இயற்கை நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும் காய்கனிபயிர் வகைகளை அளித்தும்உதவி புரிகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழி வழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. யானை முதல் எறும்பு ஈறாக உள்ள எண்ணில்லாத கோடிக்கணக்கான உயிரினங்கள் யாவும் ஆணும் பெண்ணுமாக அமைந்து கூடிக் கலந்து வாழ்ந்து பெருகி வருகின்றன. இங்ஙனமே செடி கொடி வகைகளில் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர் குருடு செவிடு ஊமை முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒருசிலர் தீராப் பிணியாளராயும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ்

செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாக விளங்குகின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலை நிற்கின்றனர். பிறர் சிலரோ தீயொழுக்கமே பேணிவாழ்கின்றனர்.

நம் உடலில் ஒன்பது பெருந்துளைகளும் மற்றும் பல சிறு துளைகளும் உள்ளன. ஓட்டைக் குடத்திற்குள் அடங்கியுள்ள காற்றுப்போல, நம் உயிர் அதன்கண் ஒருவாறு தங்கி யிருக்கின்றது. நம்முடைய உடம்பில் ஓர் உறுப்புக் குறைந்தால் அதனை நாமே மீட்டும் படைத்துக் கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு உடம்பிலும் உயிராகிய காற்று, தங்கிஇயங்கி வருகின்றது. உயிர்களின் பிறப்பும் இறப்பும் அவற்றின் வசத்திலில்லை. நாம் விரும்பும்போது இறக்கவோ, விரும்பாமல் இருக்கும்போது இறக்காமலிருக்கவோ இயலுவதில்லை. அங்ஙனமே நம் முன் பின் பிறவிகளும், நாம் இறந்தபின் இருக்கும் நிலைகளும் மறைபொருளாகவும் வியப்பாகவும் உள்ளன.

நாம் நினைப்பது போலவோ, விரும்பி மகிழ்வது போலவோ எதுவும் நடப்பதில்லை. சில சமயங்களில் நாம் சிறிதும் எதிர் பாராத நன்மை தீமைகள் ஏற்படுதலைக் காணுகின்றோம். நம் வாழ்க்கையின் போக்கு நமக்கே விளங்குவதில்லை. மகப்பேறு வேண்டுவோர்க்கு அது கிடையாமையும், வேண்டாதார்க்கு அது மிகுதியாகக் கிடைத்தலும், ஆண் மகவு வேண்டுவோர்க்குப் பெண் மகவு பிறத்தலும்,பெண் மகவுவேண்டுவோர்க்கு ஆண் மகவு உதித்தலும், சில சமயங்களில் இரண்டுமல்லாத அலித்தன்மையில் குழந்தைகள் தோன்றுதலும் போன்ற, பலப்பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம்.

உலகப் பொருள்களெல்லாம் சடம் சித்து என்று இருவகைப்படும். சடம் என்பது உயிரில் பொருள். சித்து என்பது உயிருடைய பொருள். சடப் பொருள்கள் உயிரும் உணர்வும் உடையனவல்லவாதலின் தாமேஇயங்கமாட்டா. சித்துப் பொருள்களோ உயிரும் உணர்வும் உடையனவாயினும், சிற்றறறிவும் சிறு தொழிலும் உடையவை. தமக்கெனச் சுதந்திரமில்லாதவை. ஆதலால் இவையிரண்டிற்கும் வேருக உள்ள, பேரறிவும் பேராற்றலும் உடைய பரம்பொருளே,இவ்வுலகைப் படைத்து இயக்குவதாதல் வேண்டும். குடத்தைக் காணுங்கால் அதனை வனைந்த குயவன் ஒருவன் உண்டென உணர்வோம். நல்ல அணிகலன் ஒன்றைக்காண நேர்ந்தால் அதனைச் செய்த கம்மியன் ஒருவன் உளன் எனத் தெளிவோம். ஓர் அழகிய ஆடையைக் காண்பின் அதனை நெய்த நெசவாளன் ஒருவன் உண்டு எனக் கொள்வதில் நமக்கு ஐயம் ஏற்படுவதில்லை. அவ்வாறே இவ்வுலகத்திற்கும் ஒருகடவுள் உண்டு என நாம் நிச்சயமாக நம்பலாம்.

இவ்வாறு 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்னும் சிறந்த துதிநூலைப் பாடியருளிய திருவருட் பெருஞ்சான்ரோர் ஆகிய **சிதம்பர சுவாமிகள்,** தாம் இயற்றிய 'பஞ்சதிகார விளக்கம்' என்னும் தத்துவ நூலிற் பல பாடல்களினுல் விளக்கி யிருக்கின்ருர்.

பரந்த உலகத்தை நோக்கி யுணருந்தோறும் இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது அறிவிற்கு ஏற்றதேயாகும். அக்கடவுட் பொருளே நமக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து நம்முடைய நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகிறது. இவ்வுண்மைமையை உணர்ந்துநம்பி வாழ்வதனுல் நமக்கு நம் உலகியல் வாழ்வில் நன்மையே ஏற்படும் என்பது திண்ணம். "நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்பர் பாரதியார். நம்பிக்கையினுல் விளையும் நலங்கள் பல.

"இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத மறைவான ஏதோ ஒரு பேராற்றல் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனை நாம் காணவிட்டாலும் உள்ளதென்று உணருகின்றோம். காணப்படாத இந்த ஆற்றல்தான், தன்னை

நாம் உணர்ந்து கொள்ளும்படிப் புலப் படுத்துகின்றது. நாம் நம் புலன்களால் உணர்கின்ற உலகியற் பொருள்களைப் போல இல்லாமல், அவற்றிற்கு வேறுபட்டதாக அது விளங்குகின்றது. அதனுற்றுன் எந்தச் சான்றுகளும் காட்டி விளக்கி அதனை நாம் நிறுவ முடியவில்லை. அது நம் அறிவுக்கும் சான்றுகளுக்கும் அப்பாற்பட்டுக் கடந்து நிற்கின்றது.

அப்பேராற்றலே கடவுள். கடவுட் பொருள் வெளிப்புறச் சான்றுகளால் அறியப்படுவதன்று. தமது உள்ளத்தினுள்ளே அதன் உண்மை இயல்பு விளங்குதலைக் கண்டு உணர்ந்ததனுல், புனித மடைந்த ஞானிகள் அல்லது அருளாளர்களின் வாழ்க்கைப் பண்பினுலும் ஒழுக்கத்தினுலுமே, அதன் இருப்புப் புலனுகும்.

எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங் காலங்களிலும், வாழையடி வாழையாக இடையருமல் தொடர்ந்து தோன்றிவரும் மெய்யுணர்வாளர்கள் அல்லது முனிவர்களின் அனுபவங்களிலேயே கடவுளை விளக்கும் சான்றுகள் காணப்படும். அச் சான்றுகளை மறுதலிப்பது, ஒருவர் தன்னைத் தானே மறுதலித்துக்கொள்ளுதற்குச் சமமாகும்.

கடவுள் என்பது காரண காரியங்களைக் காட்டி, வெறும் சொற்போர் செய்வதன் வாயிலாக அறியப்படக் கூடிய பொருளன்று. சொற்போர் புரிவதன் மூலம், கடவுளுண்மையை நிறுவும்படி நீங்கள் என்னைக் கேட்பீர்களேயாயின், நான் தோல்வியடைதல் திண்ணம். ஆனுல் நான் உங்களுக்கு இதனை உறுதியாகக் கூறமுடியும். இந்த அறையில் நீங்களும் நானும் அமர்ந்திருக்கின்ருேம் என்பதை எவ்வளவு தெளிவாக யான் உணர்கின்றேனே, அதனைவிட மிகமிகத் தெளிவாகக் கடவுள் இருத்தலை யான் உணர்கின்றேன்.

காற்றில்லாமலும் நீரில்லாமலும் நான் வாழ்தல்கூடும். ஆனுல் கடவுளின்றி என்னுல் வாழ்தல் இயலாது. நீங்கள் என் கண்களைப் பறிக்கலாம். என் மூக்கைத் துண்டிக்கலாம். அவற்ருல் என்னைக் கொல்ல முடியாது. ஆனுல், கடவுளிடம் யான் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சிதறிப்போகச் செய்யுங்கள். அப்போதே யான் இறந்து படுவேன்" எனக் காந்தியடிகள் கூறியிருத்தல், இங்குநாம் பெரிதும் கருதுதற்குரியது.

தெய்வம் உண்டுஎனத் தெளிந்து ஒழுகுதல், நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்ருனும் துணை புரியும். சமய வுணர்வும் தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன, எனத் துணிந்து கூறலாம். (1)

சமய வுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் சீரும் சிறப்பு முற்று விளங்கினுலும், சமயவுணர்வும் தெய்வ நம்பிக்கையும் உடைய ஒருவன் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ் சிறப்பு பின்னையவனிடம் அமைந்திருக்கக் காணலாம். (2)

எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வ வுணர்வு மிக்கவர்களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

—ஆசிரியர்.

---

(1) "The highest flights of charity, devotion, trust, patience, bravery etc., to which the wings of human nature have spread have been for religious ideals."

—**Prof. William James.**

(2) "When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be confessed, that the former possesses something which others lack."

—**Prof. J. B. Pratt.**

# வேத விழுப்பொருள்

**முன்னுரை :**

'வேத விழுப்பொருள்' என்னும் வியன் பெருந் தொடர், மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில், திருவெம்பாவை என்னும் பகுதியில், வருவதொன்றாகும். சிவபெருமானை விண்ணுக்கு ஒரு மருந்து என்றும், வேதவிழுப் பொருள் என்றும், கண்ணுக்கு இனியான் என்றும், மணிவாசகர் அத் திருவெம்பாவைப் பாடலில் நனிமிகப் புகழ்ந்து பாடுகின்றார்.

ஒரு சில மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள், வேதத்திற் சிவனுக்கு இடமில்லை என்றும், சிவவழிபாடு வேத காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை என்றும், பிறவாறும் கூறுவர். அங்ஙனம் இந்நாளிற் கூறுவோர் சிலரின் கூற்றுக்களை முன்னரே எதிர்நோக்கி, அத்தகைய பொருந்தாக் கருத்துக்களை அறவே நீக்கும் வகையில், மணிவாசகரால் அருளிச் செய்யப் பெற்றது போல, "வேத விழுப்பொருள்" என்னும் வியத்தகு தொடர், நலத்தக அமைந்துள்ளது.

**சதருத்திரீயம் :** இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதம் நான்கினுள், அதர்வண வேதம் ஏனைய மூன்று வேதத்தில் அடங்கும். ஆதலின், முதல் மூன்று வேதங்களே மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுவன. இவற்றுள் எசுர் வேதம் பெரிதும் சிறந்தது. முழு முதற் கடவுளின் வழிபாட்டு நெறியினை மிகுத்தெடுத்து விளக்கிச் சொல்லும் திறனில், எசுர் வேதமே மற்ற மூன்று வேதங்களிலும் ஏற்றம் மிக்கது. அது பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிந்து, எண்பத்திரண்டு பிரச்சினங்களை யுடையதாய், மாந்திரம் பிராம்மணம் என இரு பகுதியாக விளங்கும். அவற்றுள் முதலான மாந்திரம் என்னும் சம்மிதாபாதம் ஆகிய ஏழு காண்டங்களுமே மிகச் சிறந்தன. அவற்றுள் நான்காவதாகிய நடுக்காண்டம் சிறந்தது. அஃது ஏழு சம்மிதைகளாக இருக்கும். அவ்வேழினுள் நான்காவதாகிய நடுச் சம்மிதையின் நடுவே சதருத்திரீயம் விளங்கும். அம் மந்திர பாகம் முற்றும் சிவபெருமானின் சிறப்புக்களை எடுத்து விவரிக்கும். அச் சதருத்திரீயத்தின் இருபத்தெட்டாவது மந்திரத்தின்கண் உள்ள,

"நமோ பவாய ருத்ராயச நம
சர்வாயச பசுபத்யேச நமோ
நீலக்ரீவாய சிதிகண்டாயச"

என்னும் சொற்றொடர்கள், சிவபெருமானைப் புகழ்ந்துரைப்பனவாக அமைந்துள்ளன. மேலும் அதன் இரண்டாவது மந்திரமாக,

"யாதேருத்ர சிவாதநூர்
அகோரா யாபகாசினீ
தயாநஸ்தந்வா சந்தமயா
கிரிசந்தா பிசாகசதி"

என்பது காணப்படும். "மலைகளின் மேல் எழுந்தருளி யிருப்பவரே! உருத்திர சிவ பெருமானே! கொடிய தல்லாததாய்த் துன்பத்தைச் செய்யாததாய் உள்ள, நுமது திருமேனியோடு தோன்றி, அடியேங்களை விளக்கம் பெறச் செய்தருள்க" என்பது அதன் பொருள். இதன்கண் 'உருத்திர சிவன்' என்னும் சொற்றொடரும் பெயரும் வந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

**திருவைந்தெழுத்து :** இனி இவ்வாறே சுக்கில எசுர் வேதத்தில் உள்ள வாஜசநேய சங்கிதையில் "தேவரீர் அருளாளராய் இருத்தலாற் சிவன் எனும் நாமம் பெற்றீர்" என்னும் பொருள்படச் "சிவோ நாமாஸி" எனச் சொல்லப் பெற்றிருப்பதும், நாம் அறிந்து இன்புறற்பாலது.

எசுர் வேதத்தில், மாந்திரம் எனும் சம்மிதாபாகம் ஆகிய ஏழு காண்டங்களில், நடுக்காண்டத்தைச் சேர்ந்த ஏழு சம்மிதைகளுள் நடுச் சம்மிதையில் நமசிவய என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் சிறப்புற்றுப் பொலிகின்றது. இதனை,

"மும்மறையுள் நடுமறையில்
முனிவில்எழு காண்டத்துள்
செம்மைதரு நடுக்காண்டம்
சேர்ந்தஎழு சங்கிதையில்
அம்மாநடுச் சங்கிதையின்
ஆதிஈறு ஒழித்துநடுப்
பொம்மல்உற உயர்மனுவின்
பொருளாவான் சிவன் என்க"

எனப் பெரியோர்கள் விதந்து கூறி விளக்கியிருத்தல் காணலாம்.

**இருக்குவேதம் :** இம்மட்டோ! இருக்கு வேதத்தின் முதல் மண்டிலத்தில் சிவபிரான் வேள்விகளுக்கும் துதிப் பாடல்களுக்கும் தலைவர் என்றும், இரண்டாவது மண்டிலத்தில் ஈசானரான அவர் பொன் வண்ணமுடையவர்; எல்லா உயிர்களுக்கும் தலைவர்; வலியவர்கட் கெல்லாம் வலியவர்; எல்லா உலகங்களுக்கும் வீரர்களுக்கும் தேவர்களுக்கும் முதல்வராய்த் தெய்வத் தன்மையினின்றும் நீக்கப்படாதவர் என்றும்; பலவாறு புகழ்ந்து துதிக்கப்பட்டிருக்கின்றார்.

இன்னும் இதன் ஆறும் மண்டிலத்தில் சிவபிரான் அனைத்து நோய்களையும் நீக்க வல்ல அளவற்ற மருந்துகளை வைத்திருப்பவர் (வைத்திய நாதர்) என்றும், எல்லா உலகங்களுக்கும் தலைவர் என்றும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.

மற்றும இருக்கு வேதப் பத்தாம் மண்டிலத்தின் நூற்று முப்பத்தாறும் பதிகத்தின் ஏழாவது மந்திரத்தில்,

"கேசி விஷஸ்ய பாத்ரேண யத்
ருத்ரேணு பிபத்ஸகா"

என்று சிவபெருமான் ஆலாலம் என்னும் அருநஞ்சை யருந்தித் தேவர்கள் முதலான எல்லா உயிர்களையும் காத்தருளினமை சொல்லப்பட்டுள்ளது.

**சுவேதாசுவதரம் :** இனி சுவேதாசுவதரம் என்னும் தொன்மைமிக்க உபநிடதமும் "மனிதன் ஆகாயத்தைத் தோல்போற் சுருட்ட வல்லவனாகும் வரையில், சிவனை அறியும் அறிவால் அன்றித் துக்க நிவர்த்தி உண்டாகாது" என்று வலியுறுத்திக் கூறுகின்றது. இதனை மேற்கோளாகக் கொண்டு,

"பரசிவன் உணர்ச்சி யின்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்குஈறு எய்தி
வீடுபேறு அடைதும் என்றல்
உருவமில் விசும்பின் தோலை
உரித்து உடுப்பதற்கு ஒப்புஎன்றே
பெருமறை இயம்பிற்று என்னில்
பின்னும்ஓர் சான்றும் உண்டோ?",

எனக் கச்சியப்ப சிவாசாரியர், தாம்பாடிய கந்தபுராணத்தின்கண் அருளிச் செய்திருத்தலும் அறிதற்குரியது.

**முடிவுரை :**

இன்னோரன்ன பல செய்திகளையும் எண்ணுங்கால், மாணிக்கவாசகர் சிவபிரானை 'வேதவிழுப்பொருள்' என்றும், சேக்கிழார் சைவ சமயத்தை 'வேதப் பயனாம் சைவம்' என்றும் குறிப்பிட்டருளியதன் நுட்பமும் சிறப்பும் புலனாகும்.

—ஆசிரியர்.

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

(பொழிப்புரை) நெஞ்சமே! அன்று பூத்த புதிய குவளை மலரைப் போன்ற அழகிய கண்களை உடைய அபிராமியும், அப் பிராட்டியின் செந்நிறத்தை உடைய கணவராகிய சிவபெருமானும் ஒன்று சேர்ந்து, நம்மை ஆட்கொள்ளும் காரணத்திற்காக, நாம் இருக்கும் இவ்விடத்திற்கு அணுகிவந்து, நம்மைத் தம்முடைய அடியார்களின் கூட்டத்தில் நடுவே இருக்கும்படி செய்து, நம்முடைய தலையின்மீது தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பதியும்படி செய்வதற்கு, நாம் முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்கின்றோம் போலும்!

(குறிப்புரை) கண்ணினது அழகையும் சிறப்பையும் புகழ்ந்து அம்பிகையைக் "குவளைக் கண்ணி" என்றார். குவளை என்னும் சொல்லுக்கு ஈண்டுத் தாம் கருதிய பொருள் இது எனற்குப் 'பூங்குவளை' என்றார். குவிதலும் வாடுதலும் இன்றி, அம்பிகையின் கண்கள் வியத்தகு நலமுடையனவாதலின் 'புதுப் பூங்குவளை' என விதந்து ஓதினார். 'குவளைக் கண்ணி கூறன் காண்க' என்பது திருவாசகம். அம்பிகைக்குக் கண்போன்றவர்; கண்ணில் இருப்பவர் என்னும் கருத்தில் சிவபிரானைக் 'கணவர்' என்றார். மகளிர் விரும்பும் சிவந்த நிறத்தினையும், செம்மைக் குணத்தையும் உடையவர் என்னும் கருத்துப் பற்றி 'செய்ய கணவர்' எனப் புகழ்ந்தார். குழந்தையை நலமுறப் பேணி வளர்த்தற்குத் தாயும் தந்தையும் ஆகிய இருவருமே சேர்ந்து செயல் புரிதல் வேண்டுமாதலின் 'கண்ணியும் கணவரும் கூடி' என்றும்; எத்தனையும் உயர்ந்தவர்கள் எத்தனையும் எளியராய் இவ்வுலகத்திற்குப் போந்தனர் எனற்கு "நம் காரணத்தால்" என்றும் கூறினர். வந்தருளியதே பெருஞ் செயலாக இருப்ப, அதனின் மேற்பட்டும் நமக்குப் பெருநலம் புரிந்தனர் என்பதுணர்த்த, "அடியார்கள் நடு இருக்கப் பண்ணி" என்றார். அதற்கு ஏற்ற தகுதி யிருத்தல் வேண்டுதலின், அதனை நம்மிடம் விளைவித்தனர் எனக் குறிப்பிக்க "நம் சென்னியின் மேற் பத்ம பாதம் பதித்து" என்றார். நண்ணி இங்கே வந்ததும், அடியார்கள் நடு இருக்கப் பண்ணியதும், சென்னியிற் பாதம் பதித்ததும் ஆகிய இறையருட் செயல்கள், முன்னை முன்னைப் பிறவிகளிற் புண்ணியஞ் செய்தவர்கட்கு அன்றிப் பிறர்களுக்கு வாயாதன ஆகலின், "புண்ணியம் செய்தனம்" என்றார். 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்பது சம்பந்தர் தேவாரம். தாம் தகுதியொன்றும் இன்றி இருக்கவும், இறைவனும் இறைவியும் கூடிவந்து தமக்குச் செய்த பேரருட்டிறனை நினைந்து வியந்து மருண்டு,

நாம் புண்ணியமும் செய்துள்ளோமா! என வினவியதாகவும் கொள்ளலாம். தம்மொடு மனத்தையும் உளப்படுத்திக் கொண்டதனுல் "செய்தனமே" எனவும் "நம் காரணத்தால்" எனவும் தன்மைப் பன்மையிற் கூறினர். "அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளேப் புரியாய்" என்பது திருவாசகம். (41)

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பனிமொழி வேதப் பரியுரையே.

(பொழிப்புரை) அகன்று பரவிப் பருத்து, ஒன்றோடொன்று பொருந்த வளர்ந்து, தளர்வு இன்றி இறுக்கம் உற்று, இளகிய தன்மை வாய்ந்து, முத்துமாலையை அணியாகக் கொண்ட தனங்களாகிய மலையைக்கொண்டு, சிவபெருமானின் வலிமை மிக்க நெஞ்சத்தினைத் தான் நினைத்தவாறெல்லாம் நடம் செய்யும்படி இயக்கி வைக்கின்ற உள்ளக் குறிப்பினையும், அதற்கு ஏற்ற அழகையும் உடைய அபிராமி அம்மை, நல்ல பாம்பினது படத்தைப் போன்ற அல்குலையும், குளிர்ந்த இனிய சொற்களையும், வேதமாகிய சிலம்பையும் உடையவள் அவள்.

(குறிப்புரை) சிவபிரான் தென்முகக் கடவுள் நிலையிற் பரமயோகியாகப் பொறி வாயில் ஐந்தவித்தவன் ஆதலின், அவனது திருவுள்ளத்தை 'வலிய நெஞ்சு' என்றார். சிவபிரானின் அத்தகைய வலிய நெஞ்சையும் தனது அழகாற் கவர்ந்து, தான் விரும்பும் வகைகளிலெல்லாம் ஈர்த்து இயக்கிவைக்கும் சிறப்புடையவள் ஆதலின், அம்பிகையை 'வலிய நெஞ்சை நடங்கொண்ட நாயகி' என்றார். இறைவன் ஆடுகின்றான், நடம் செய்கின்றான்; இறைவி ஆட்டுவிக்கின்றாள், நடம் கொள்கின்றாள். தன் விருப்பத்திற்கு ஏற்றபடியெல்லாம் கணவன் இணங்கிப் பணிந்து நடக்குமாறு மனைவி செய்தலை ஆட்டி வைத்தல் (நடம் கொள்ளுதல்) எனக் குறிப்பிடுதல் உலக வழக்கு. தன்னலமும் செருக்கும் மிக்க ஒரு சில இழிதிற மகளிர் செயல்போல் அன்றி, இச்செயல்தான் உலகுயிர்களின் உய்திகருதியே அம்பிகையாற் செய்யப் பெறுதலின், 'கொள்கை நலம் கொண்ட நாயகி' என்று புகழ்ந்துரைத்தார். "நீ ஆகியர் என் கணவனை; யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே" என்றபடி, கணவனின் நெஞ்சை ஈர்த்துத் தனக்குரிமை செய்து கொள்ள வல்லராதலே, கற்புடைய மகளிர்க்குரிய நற்பண்பாகும். அத்திறம் கருதிக் 'கொள்கை நலம்கொண்ட நாயகி' என்றார் எனினும் ஆம். கணவன் விரும்பி மேன்மேல் நயத்தற்குரிய எழிலும் பண்பும் மிக்கவளே நாயகி எனப்படுவள். மலையை வளைத்தவரையே தன் கொங்கை மலையாற் குழைவித்தாள், அனைத்துயிரையும் கூத்தாட்டுவானாய் நடம் புரிகின்றவனையே தான் நடங்கொண்டாள் என விதந்து கூறியபடி. மனைவி ஆட்டி வைக்கின்றபடியெல்லாம் ஆடுகின்றவனே ஆயினும், அதனால் அவனுக்குப் பெருமையேயன்றி இழிவில்லை எனற்கு 'இறைவன்' என ஒருமையாற் கூறாது, 'இறைவர்' எனப் பன்மையாற் கூறினர். இனி, இதனை அம்பிகையைச் சிறப்பிக்க வந்த எள்ளற் குறிப்பு எனினும் ஆம். அம்பிகையின் திருவடிகளையே சூழ்ந்துவிடாது பற்றித் துதித்துக்கொண்டு கிடப்பனவாகலின், வேதங்களைப் பரிபுரம் (சிலம்புகள்) என்றார். பரிபுரை — சிலம்புகளை அணிந்தவள்; ஐ முன்னிலை வினை விகுதி. (42)

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத் திருந்தவளே.

(பொழிப்புரை) தீங்கையே நெஞ்சில் நினைக்கின்ற திரிபுர அசுரர்களாகிய வஞ்சகர்களை அஞ்சும்படி செய்ய, வளைத்த மேருமலையாகிய வில்லினைக் கையிற் கொண்டவரும், நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியை உடையவரும் ஆகிய சிவ பெருமானது, நேர்பாதியான இடப்பக்கத்தில் எழுந்தருளியுள்ளவள் ஆகிய அபிராமி அம்மை, சிலம்பு அணிந்த சிறிய திருவடிகளையும், பாசம் அங்குசம் ஆகியவற்றையும் உடையவள்; ஐந்து மலரம்புகளைக் கைகளிற் கொண்டிருப்பவள். இனிய சொற்களைப் பேசுபவள்; திரிபுர சுந்தரியாகத் திகழ்பவள்; சிந்துரம் போன்ற சிவந்த திருமேனியை உடையவள்.

(குறிப்புரை) தாரகாட்சன் கமலாட்சன் வித்துன்மாலி என்னும் அசுரர்கள் மூவரும் பறந்து திரியும் மும்மதில்களையுடையராய்த் தேவர்களுக்கும் பிறருக்கும் கேடு சூழ்ந்து வந்தனராதலின் 'தீமை நெஞ்சிற்புரி, புரவஞ்சர்' என்றார். புரம் - திரிபுரம்; மும்மதில். தீமையைச் சொல்லாலும் செயலாலும் புரிதலைவிட மிகவும் கொடுமை யுடையது மனத்தாற் புரிதலே யாகலின் 'தீமை நெஞ்சிற்புரி வஞ்சர்' என்றார். 'உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன்' என்று நம்மாழ்வார்(2845) அருளியதன் உரைநுட்பம் இங்கு உணரத்தக்கது. 'அஞ்சுவிக்க' என வரற்பாலது 'அஞ்ச' என வந்தது. இவ்வாறு வருவதனை வட நூலார் நயக்கு என்பர். குனித்தல் - வளைத்தல். பொருப்பு-மலை. சிலை - வில். திரிபுர அசுரர்களை அழிக்க இறைவன் மேருமலையை வில்லாக வளைத்தார் என்பது வரலாறு. 'கல்லால் நிழல் மலைவில்லார்' என மெய்கண்ட தேவரும் குறிப்பிட்டருளினர். சிவபெருமான் தீவண்ணர் எனவும், செம்மேனி எம்மான் எனவும் பிறவாறும் புகழ்ந்தோதப்படுவராகலின் 'எரிபுரை மேனி இறைவர்' என்றார். செம்பாகம் குறைவும் கூடுதலும் இல்லாத சமபாகம்; நேர்பாதி. 'காமத்திற் செம்பாகம் அன்று பெரிது' என்பர் திருவள்ளுவரும். பரிபுரம் - சிலம்பு, சதங்கை. கொடியவர்களைப் பிணிக்கவும் ஒறுக்கவும், அம்பிகை முறையே பாசமும் அங்குசமும் ஏந்தியிருத்தல் பற்றிப் 'பாசாங்குசை' என்றார். பாசம் + அங்குசம் + ஐ. தாமரை முல்லை அசோகு மா நெய்தல் எனும் ஐந்து மலர்களையும் அம்புகளாகக் கொண்டிருத்தலின் 'பஞ்சபாணி' என்றார். பஞ்சம் - ஐந்து. பாணம்-அம்பு. பாணங்களை யுடையவள் 'பாணி'. அடியவர்கள் பால் ''அஞ்சல் ஓம்புமதி, அறிவல் நின்வரவு' என்றாற் போலும் ஈரம் அளைஇய சொற்களைக் கூறி, மூவுலகும் வியந்து போற்றுதற்குரிய பேரழகு வாய்ந்த தனது திருவுருவத்தையும் அவர்களுக்குக் காட்டி அருள் புரிதலின், அம்பிகையை 'இன்சொல் திரிபுர சுந்தரி' என்றார். அம்பிகையினது பேரழகின் பெற்றியை ஒரு சிறிதேனும் நம்மனோர்க்குக் குறிப்பிட்டு விளக்கும் கருத்தால் 'சிந்துர மேனியள்' எனப் புகழ்ந்தார். சிந்துரம் - சிவப்பு. மேனி - மினுமினுப்பு மிக்க திருவுருவம். (43)

தவளே இவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை யிறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

(பொழிப்புரை) அபிராமியம்மையாகிய இவள், தவத்தின் வடிவாகவும் பயனாகவும் திகழ்பவள்; எங்களுக்கு நலம்புரிபவர் ஆகிய சிவபெருமானுக்கு மனைவியாய், அவர்தம் இல்வாழ்க்கைத் துணைவியாக விளங்குகின்ற அவளே, அவருக்கு ஒருவகையில் தாயாகவும் ஆகிநின்றாள்; ஆதலினால் இத்தகைய சிறப்புடைய இந்த அபிராமி யம்மையே தேவர்கள் எல்லோருக்கும் மிக மேலான தலைமையுடையவள் ஆவாள்; இனி மேல் யான் இவளின் வேறாகப் பிறிதொரு தெய்வம் உண்டு என்று நினையேன்; நினைத்தாலும் அதற்காக யான் மெய்யினால் தொண்டு செய்து தளர்ச்சி அடைந்து வருந்தமாட்டேன்.

(குறிப்புரை) அம்பிகையை இடையருது தொழுது, நனவிலும் கனவிலும் அவள் பாற் பழகும் பயிற்சி மிகுதியால், அருகில் இருப்பவளாக உணர்ந்து 'இவள்' என்று அண்மைச் சுட்டினுற் கூறினர். புறநானூற்றில் (72) 'இளையன் இவன் என உளையக் கூறி' என்புழி, 'இவன் என்ருர் தம் கருத்துக்கண் அணிமையான்' என உரையாசிரியர் தந்துள்ள விளக்கம் இங்கு நினைக்கத்தகும்.

'நின்பூசனை என்றும் முடிவதில்லை நம்பால்' என இறைவன் மொழிந்தருளும் வண்ணம், மாறிலாது என்றும் மகிழ்ந்து ஈசனைப் பூசனை இயற்றும் தவம் புரிபவளாதலின், அம்பிகையைத் 'தவள்' என்ருர். உலகுயிர்கள் நலமுற வாழ்தல் வேண்டும் எனப் பெரிதும் விரும்பி முயன்று அவற்றிற்கெல்லாம் தாயாய்ப் பாடு கிடப்பவள் ஆதலின் 'தவள்' என்ருர் எனினுமாம். தாய்மையும் துணைமையும் ஆதலே பெண்ணின் பெருந்தக்க சிறப்புகளாதலின், அம்பிகை அவ்விரு நிலைகளிலும் சிறந்து திகழ்தலை வியந்து புகழ்ந்தார். 'எங்கள்' என உரிமை கொண்டாடியதும், 'சங்கரனர்' என உயர்வு தோன்றக் கூறியதும், 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்னும் திருக்குறளின் சொற்பொருள் நலங்கள் தோன்ற வறிதே மனைவி என்னுது 'மனை மங்கலமாம் அவள்' என விதந்தோதிச் சிறப்பித்ததும், ஆசிரியரின் பக்திச் சிறப்பினையும், பண்பாட்டு மேன்மையினையும் புலப்படுத்தும். ''அவள்'' என்றது வெறும் சுட்டுப் பெயர் அன்று; 'அத்தகைய சிறப்புடையவள்' என்னும் குறிப்புடையது. 'அன்னையும் என்றது இறந்தது தழீஇய எச்சவும்மை. சத்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவம் தோன்றுதலின் 'அவர் தமக்கு அன்னையும் ஆயினள்' என்ருர். உம்மையைப் பிரித்துக் கூட்டி, உலகுயிர்களுக்கே யன்றி, 'அவர் தமக்கும் அன்னை ஆயினள்' எனவும் கொள்ளலாம். அம்பிகையின் ஒப்புயர்வற்ற சிறப்பினை 'இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம்' எனக் குறிப்பிட்டார். மேலை - மேலாகிய, உயர்ந்த. அம்பிகையின் தனித் தலைமைப் பெருஞ் சிறப்பினை உணராத நிலையில், ஆசிரியர் முன்பு வேறு சில தெய்வங்களும் உளவாகக் கருதி, அவற்றிற்கு மெய்த் தொண்டுகள் செய்து வீணே வருந்தித் துவண்டனராதலின், இனி அங்ஙனம் துவளும் நிலை எனக்கு இல்லை என்பார், ''துவளேன் இனி ஒரு தெய்வமுண்டாக மெய்த் தொண்டு செய்தே'' என்ருர். இனி - இனியும், இப்போதில் இருந்து. ஒரு - வேறு ஒரு. உண்டாக - உள்ளதாக நினைத்துக் கொண்டு. மெய்த்தொண்டு - உண்மைத் தொண்டு; மெய்யால் செய்யும் தொண்டு. ''யான் துவளேன்'' என்றது, நீரும் துவளற்க என அறிவுறுத்தும் குறிப்பினது. (44)

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தருள ரோஇல ரோ,அப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே

(பொழிப்புரை) அபிராமி யம்மையே! நின்னுடைய திருவடிகளுக்குப் பணிவிடை புரியாமலும், நினது திருவடிகளை வணங்காமலும், உண்மைப் பொருள் இன்னது என்று தெளிந்து தங்கள் மனம் விரும்பியவற்றையே செய்துவந்த மெய்யுணர்வினர் ஆகிய நின் அடியவர்கள் பழங்காலத்தில் இருந்தனரோ? இல்லையோ? அவர்களின் இயல்பினைப் பின்பற்றி அடியவன் ஆகிய யானும் அவ்வாறு செய்ய முற்பட்டால், அது வஞ்சகச் செயல் ஆகுமோ? அல்லது தவச் செயல் ஆகுமோ? எளியேன் மாறுபாடான செயல்களைச் செய்தாலும் பொறுத்துக் கொள்ளுதலே நினக்குச் சிறப்பாகும்; அதற்கு மாருக எளியேனை வெறுத்து ஒதுக்குதல் முறையாகாது.

(குறிப்புரை) வேதாகமங்கள் முதலிய அருள் நூல்கள் விதித்தபடி வழிபடுதற்குரிய நம்மனோர் முறைக்கும், அவ்விதிகளைக் கடந்த நிலையில் தம்செயல் இழந்து பக்தி மேலீட்டால் இறைவழிபாடு புரிகின்ற ஞானிகளுக்கும் வேறுபாடு உண்டு. நம்மைப் போல, அவர்களுக்கு ''நன்மையொடு தீமையில்லை; சீலமில்லை தவமில்லை; விரதமொடு ஆச்சிரமச் செயலில்லை; தியானமில்லை சித்தமலம் இல்லை''. (சித்தியார்: 8, 32). மேலாகப் பார்க்கும்போது, அவர்கள் நம்மைப் போல இறைவனுக்குத் தொண்டு செய்யாமலும் தொழாமலும் இருப்பதுபோலத் தோன்றும். ஆயினும், அவர்கள் உண்மைப் பொருள் இன்னதென்றுணர்ந்து கொண்டு, தமது விருப்பப்படியே இறைவனை வழிபடுவார்கள். ஆதலின் ''தொண்டு செய்யாது, நின்பாதம் தொழாது, துணிந்து இச்சையே பண்டு செய்தார்'' என அத்தகைய ஞான நிட்டையுடைய நல்லோர்களைக் குறிப்பிட்டார். சிவகோசரியார் கண்ணப்பர் என்னும் இருவரும், முறையே விதி நெறிக்கும், பக்தி நெறிக்கும் உரிய எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர். சாக்கிய நாயனர் கல்லால் எறிந்தார். மூர்க்கநாயனர் சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்தினர். மேலால் நோக்குதற்குத் தொண்டுசெய்யாரும் பாதம்தொழாரும் போல இவர்கள் இருந்தனர். ஆதலின் 'பண்டு உளரோ இலரோ' என்றார். இருந்தனர் என்பது கருத்து. 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கி' இறைவன் அவர்களை ஆட்கொண்டருளினன் ஆதலின், அவர்களைக் கண்டும் பின்பற்றியும் தாம் செய்கின்ற செயல்களையும் அங்ஙனம் ஏற்றுக் கொண்டருளித் தவமாக்குதல் வேண்டும் என்பார் ''அப்பரிசு கண்டு அடியேன் செய்தால், அது கைதவமோ? அன்றிச் செய் தவமோ?'' என்றார். ''தொண்டாடித் தொழுவார் தொழக்கண்டு தொழுதேன் என் வினைபோக'' என்பது சுந்தரர் தேவாரம். ஒருகால் தம் செயல்கள் கைதவம் எனப்படுமாயின், விதி கடந்தும் வரம்பிறந்தும் தாம் புரிந்த கைதவச் செயல்களையும், அம்பிகை பொறுத்தருளுதல் வேண்டுமேயன்றித் தம்மை வெறுத்தொதுக்குதல் ஆகாது எனற்கு 'மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே; வெறுக்கை அன்றே'' என்றார். செய்தாலும் என்ற எதிர்மறையும்மையால், தாமாக வேண்டுமென்று அறிந்து செய்யாமை பெறப்படும். 'பொறுக்கையே நன்று' என இயைக்க. அன்று - முறையன்று, நன்றன்று. தமது அன்பின் இயல்பும் வழிபாட்டின் இயல்பும் அறியாமல் உலக மக்கள் அலர் தூற்றி இழித்துப் பழித்துரைத்து வந்தமை யுணர்ந்து, இங்ஙனம் அபிராமி பட்டர் அம்பிகையின்பால் வினவியும் வேண்டிக் கொண்டும் துதித்தனர் போலும்! 'பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம் பொய்யினையே' 'பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி' (45)

வெறுக்குந் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றே,புது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

(பொழிப்புரை) புதியதாகத் தோன்றிய ஆலாலம் என்னும் கொடிய நஞ்சத்தை அருந்தி, நீலநிறம் அடைந்த அழகிய கழுத்தினையுடைய சிவபெருமானின் இடப் பக்கத்தைச் சேர்ந்துள்ள, பொன்நிறமான திருமேனியையுடைய அபிராமி அம்மையே! தாம் வெறுப்பதற்குரிய இழிந்த செயல்களைச் செய்தாலும், தம்முடைய அடியவர்களைப் பெரியோர்கள் மன்னித்தருளும் பெருந்தன்மை, இன்று நேற்று ஏற்பட்ட புதிய செயல் அன்று. ஆதலின் நீ ஏற்றுக்கொள்ளாது விலக்கும் இயல்புடைய செயல்களை யான் செய்தாலும், (நீ என்னை மன்னித்தருள்வாய் என்ற நம்பிக்கையுடன்) யான் நின்னை எப்பொழுதும் வாழ்த்தித் துதிப்பேன்.

(குறிப்புரை) முன்பு எப்போதும் கண்டும் கேட்டும் இராத கொடுமையுடைய நஞ்சு ஆதலின், 'புதுநஞ்சு' என்றார். ''கறை மிடறு அணியலும் அணிந்தன்று.

அக்கறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'' என்றபடி, சான்றோர் அனைவரானும் திருநீலகண்டம் எனச் சிறப்பிக்கப்படுதலின் 'திருமிடறு' என விதந்தோதினர். பொன் நிறம் உடைய அம்மையைப் 'பொன்னே' எனப் புகழ்த்தார். 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே' என்றது காண்க. செயலால் விளையும் தீங்கு, சொல்லால் அரும்பும் குற்றம், நினைவால் நேரும் மாசு ஆகிய பிழைகள் எல்லாம், அருவருப்பைத் தோற்றுவித்து அனைவரும் வெறுக்கும்படி செய்தலின், நம்மனோரின் பிழைகளை 'வெறுக்கும் தகைமைகள்' என்றார். மிக்கோர் பொறுப்பதனால், தாமும் வெறுக்கும் இழிவு என்னுது 'தகைமை' என்றார். ஒன்றல்ல பல செய்யினும் பொறுத்தருள்வர் என்பதற்கு ஒருமையிற் கூறாமல், 'தகைமைகள்' எனப் பன்மையால் மொழிந்தார். மிக்கோர் பொறுப்பர் என்பது காரணமாக அடியராயினர் வெறுப்பன செய்யார் என்பதனை வலியுறுத்த, எதிர்மறையும்மை கொடுத்துச் 'செய்யினும்' என்றார். அறிவு ஆற்றல் பண்பு முதலியன பலவற்றானும் மிகுந்து உயர்ந்த சான்றோர்கள் 'மிக்கோர்' எனப்பட்டனர். பொறுத்தற்குரிய இயைபு தோன்றத் 'தம் அடியார்' என்றும், பொறுத்தற்குக் காரணம் விளங்கத் 'தகைமை' என்றும் குறித்தார். "குற்றம் புரிதல் எனக்கியல்பே குணமாக் கொள்ளல் உனக்கியல்பே; சிற்றம்பலவா இனிச் சிறியேன் செப்பும் முகமன் யாதுளது?'' என இராமலிங்கர் பாடியபடி, பொறுக்கும் தகைமை இயல்பு ஆதலின் 'புதியதன்றே' என்றார். 'பண்டேயுளது' என உடன்பாட்டிற்கூறாது, 'புதியதன்றே' என எதிர்மறையாகக் குறித்தார் வற்புறுத்துதற்கு. 'ஞாயிறு படரிற் காண்டல் செல்லும் கண்' என உடன்பட்டாற் கூறற்பாலதனை, "ஞாயிறு படரினல் லதைக் காண்டல் செல்லாக் கண்'' எனச் சிவஞானபோதச் சிறப்புப்பாயிரம் கூறுதல் காணலாம். "தன் அடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்'' எனவரும் பெரியாழ்வார் திருமொழி (4.9.2), இங்குச் சிந்தித்துணரற்பாலது. 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரசன் நாளைப்போவான் முதலினோர் குற்றமே செய்யினும், குணமெனக் கொள்ளும் கொள்கை யுடையவன் இறைவன்' எனச் சுந்தரர் பாடி யிருத்தல், தம் அடியாரை மிக்கோர் பொறுக்கும் தகைமைக்குச் சான்று பகரும். ஒருகால் நீ என்னை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், யான் நின்திருவடியைச் சிக்கெனப் பற்றிக் கொண்டு விடாமல் இருப்பேன் என்பார், "மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே'' என்றார். உலக மக்களிற் சிலர் பேச்சளவில் ஆத்திக ராகவும், செயல் நிலையில் நாத்திகராகவும் இருவேறு திற வாழ்க்கையினராக (Dr. Jekyll and Mr. Hyde) இருத்தலைத் தம்மீது ஏறட்டுக் கொண்டே, அபிராமி பட்டர் இங்ஙனம் பாடினர் எனக் கருதுதலும் பொருந்தும். 'வாழ்த்துவதும் தாம் வாழ்வான்' ஆதலின், 'யான் உன்னை வாழ்த்துவன்' என்றது, நீ என்னை வாழ்வித்தே யருள்வாய் என்னும் குறிப்பினது. "வெறுப்பனவே செய்யும் என் சிறுமையினை நின் பெருமையினாற் பொறுப்பவனே'' என்னும் மணிவாசகத்தினை, இப்பாடல் நினைப்பிக் கின்றது. (46)

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்;மனத் தேயொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று; வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(பொழிப்புரை) அழிவற்ற நிலையில் இன்புற்று நம்மனோர் வாழும் வண்ணம், ஒரு முழு முதற்பொருளை யான் அறிந்துகொண்டேன். அம்முதற்பொருள், ஒருவருடைய உள்ளத்திலும் எளிதில் பதிவதன்று; பிறருக்குச் சொற்களால் விளக்கிக் கூறப்படுவ தன்று. ஏழுகடல்களும், ஏழு உலகங்களும், எட்டுப் பெரிய மலைகளும் ஆகியவற்றிற்கும்


கூட எட்டாமல், இரவும் பகலும் ஆகியவற்றை முறையே செய்கின்ற சந்திர சூரியர்களுக்கு நடுவிலே அமைந்து, அது பேரொளி வீசித் திகழ்கின்றது.

(குறிப்புரை) காணமுடியாத பொருளைக் கண்ட மகிழ்ச்சியும் மாட்சியும் பற்றிக் 'கண்டு கொண்டேன்' என்று வியப்பும் விம்மிதமும் தோன்றக் கூறினர். கண்டதன் பயன் வாழ்க்கை நலம் எலாம் எய்துதலாதலின் 'வாழும்படி கண்டு கொண்டேன்' என்றார். தமிழ் மொழி இயல்பாகவே தத்துவ ஞான உணர்வை அடிப்படையாகக் கொண்டதாதலின், ஒன்று என்னும் எண்ணுப் பெயர்ச் சொல், தமிழில் கடவுள் என்னும் பொருளைச் சிறப்பாக உணர்த்தி நிற்கும். உலகிற் பல்வேறு நாடு மொழி இனங்களைச் சேர்ந்த மக்கட்டொகுதியினர், கடவுளர் பலருண்டு என்னும் கொள்கை (Polytheism) உடையவர்களாக இருந்த மிகப் பழங்காலத்திலேயே, தமிழ் மக்கள் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றுணர்ந்து, கடவுள் ஒன்றே என்னும் கொள்கை (Monotheism) உடையவராக விளங்கினராதலின், தமிழ் மொழியில் ஒன்று என்னும் சொல் கடவுளைக் குறிப்பதாயிற்று. "ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றே பதி" எனவரும் சிவஞான போதச் செய்யுள் இங்குக் கருதத்தகும். கடவுட்பொருள் 'மாற்றம் மனம் கழிய நின்ற மறைப்பொருள்' ஆதலின் "ஒருவர் மனத்தே வீழும்படி அன்று; விள்ளும்படி அன்று" என்றார். வீழ்தல் – பதிதல், எட்டுதல். விள்ளுதல் - விளக்கிச் சொல்லுதல். பாற்கடல் தயிர்க்கடல் நெய்க்கடல் மதுக்கடல். உவர்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் நீர்க்கடல் என்பன ஏழு கடல். வேலை -கடல் பூலோகம் புவலோகம் சுவலோகம் மகலோகம் சனலோகம் தவலோகம் சத்தியலோகம் என்பவை ஏழு உலகங்கள். நிலம் - உலகம். பரு - பெரிய. வரை-மலை. நிடதம் ஏமகூடம் இமயம் நீலம் சுவேதம் இருங்கவான் மாலியவான் கந்தமாதனம் என்பன எட்டு மலைகள். அம்பிகை சூரிய மண்டலத்திற்கு நடுவிலும் சந்திரமண்டலத்திற்கு நடுவிலும் வீற்றிருந்து, அவற்றிற்கு ஒளியைத் தந்து இயக்கி வைத்து அவற்றிலும் மிக்க பேரொளி பரப்பித் திகழ்பவள் ஆதலின், "இரவு பகல் சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே" என்றார். 'தான்போய் இருக்கும் அவிர்சுடர் ஞாயிறும் திங்களுமே" (34) என முன்னரும் குறித்தது காண்க. அபிராமியின் அருட்காட்சியைப் பெற்ற ஆசிரியர், அவளது திருவுருவம் பேரொளிப் பிழம்பாய்ச் சுடர்விட்டுத் திகழ்ந்தமையை, இப்பாடலிற் குறிப்பிட்டார். (47)

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

(பொழிப்புரை) ஒளி வீசுகின்ற கலைகளையுடைய சந்திரன் பொருந்தியுள்ள, சடையாகிய திருமுடியைய் யுடைய, சிவபெருமான் ஆகிய மலையின்பால் சேர்ந்து படருகின்ற, நறுமணம் வாய்ந்த பச்சை நிறமுடைய கொடியைப் போன்ற, அபிராமியம்மையின் திருவுருவத்தை மனத்தில் பதியும்படி செய்து, துன்பம் தரும் பிற நினைவுகளை அகற்றி, ஒருகணப் போதேனும் தியானத்தில் இருப்பவர்கள், அதற்குப் பிறகும்கூட, குடரும் நிணமும் இரத்தமும் கலந்து நிற்கின்ற,:உடல் ஆகிய குடிசையை அடைவார்களோ!

(குறிப்புரை) மெல்லிய இயல்பு பற்றிக் கொடி என்றும், கண்கவரும் வனப்புடைமை கருதிப் பச்சைக்கொடி என்றும், உணர்ந்து நுகருந்தோறும் உவகையூட்டுதலின் பரிமளப் பச்சைக்கொடி என்றும், அம்பிகையைப் புகழ்ந்தார். கொடி மலையிற் படரும் இயல்புடையது. அம்பிகையாகிய கொடி சேர்ந்து தழுவித் திளைத்தலின்



ஸ்ரீ தையல்நாயகி அம்பாள்
வைத்தீசுவரன் கோயில்

அன்பளிப்பு :
தருமபுர ஆதீனம்
தருமபுரம்.

சிவபெருமானை 'ஒன்றிப் படரும் குன்று' என உருவகித்தார். வானளாவி நிற்றலால் மதியுறுதலும், உயர்ந்து குவிந்து நிற்றலால் சிகரமாகிய முடியுடைமையும் குன்றுக்கு இயல்பு. ஆதலின் 'மதி துன்றும் சடைமுடிக்குன்று' எனச் சிவபிரானை விதந்தோதினர். குன்று முழுமதியும் துன்னப்பெறும்; அதன் ஒளியை மறைத்து மழுங்கவும் செய்யும். ஆனாற் சிவபிரான் சூடியிருப்பது பிறைச் சந்திரனை யாதலின் கலைமதி என்றும்; சிவபிரானைப் புகலடைந்தபின் சந்திரன் தேய்ந்த கலைகள் வளர்ந்து ஒளி பெருக வீசித் திகழ்ந்தனனுதலின் 'சுடரும் கலைமதி' என்றும் கூறினர். அம்பிகையை மனத்தில் பொருந்த இருத்தி வேறு பிறநினைவுகளை அகற்றித் தியானித்தல் வேண்டும் எனற்கு 'நெஞ்சிற் பதித்து இடரும் தவிர்த்து' என்றார். பதித்தல் - தியானித்தல். இடர் தவிர்த்தல் - பிறநினைவுகளை அகற்றல். 'அரை நிமிட நேரமட்டில் தவமுறை தியானம் வைத்தலே' அரும்பெருஞ் செயலாகலின் "இமைப்போது இருப்பார்" என்றார். அங்ஙனம் இமைப்போது அளவேனும் இருக்கப் பெற்றோர், பிறவாத பேரின்பப் பேறு எய்துவராகலின் "குரம்பையில் எய்துவரோ" என்றார். குரம்பை - குடிசை, உடல். உடம்பின் இழிவை "குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பை" என்பதனாற் புலப்படுத்தினர். (48)

—(தொடரும்)

---

## பாவைவிழாக்கள் பற்றிய விவரங்கள்

வழக்கம்போல, இக்கீலக (1968—69) ஆண்டு மார்கழியிலும், பாவை விழா மாநாடுகள் ஆங்காங்கே மிகவும் சிறப்பாக நடைபெற்றன. நடைபெற்ற இடங்கள் மொத்தம் 220. பாவைப் புத்தகங்கள் பெற்ற தொடக்கப்பள்ளிகள் 3700. பள்ளிகள் வழிபாட்டுச் சங்கங்கள், கோயில்கள், மற்றும் பல நிறுவனங்ளின் மூலம் வழங்கப்பெற்ற பாவைப் புத்தகங்கள் 3 லட்சம்; குழந்தைகளுக்குப் பரிசாக அனுப்பப்பெற்ற அம்பாள் வெள்ளிக் காசுகள் பெரியவை 20,000; சிறியவை 12735; குழந்தைகளுக்குப் பரிசாக வழங்க அனுப்பிய அருள்வாக்குப் புத்தகங்கள் 6000; காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீஆசாரிய சுவாமிகள் அனுப்பிய ஆசிச் செய்திகள் 20,000; சுவாமிமலை, நாச்சியார் கோயில், திருப்புகலூர், லால்குடி, பழநி, திருச்செந்தூர், மதுரை, அழகர்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமேசுவரம், பைம்பொழில், திருத்தணி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய பல கோயில்கள், ஸ்ரீஅம்பாள் வெள்ளிக் காசுகளைத் தயாரித்துக் கொடுத்துதவின. திருப்பனந்தாள் காசிமடம், திருச்செந்தூர், திருவாரூர், மதுரை, திருவெண்காடு, பைம்பொழில், திருப்புகலூர், பழநி, இராமநாதபுரம் சமஸ்தானம், சிவகங்கை சமஸ்தானம், அழகர் கோயில், திருநெல்வேலி, புத்தூர் ஆகியவற்றைச் சேர்ந்த கோயில்களும் பிறவும், பாவைப்புத்தகங்களைப் பதிப்பித்துக் கொடுத்துதவின. மாயூரம் ஸ்ரீ அகோர சாஸ்திரிகள் டிரஸ்டு, சென்னை ஸ்ரீ சண்முக முதலியார், சென்னை திருவாளர்கள் பி. ஜி. பால் அண் கோ ஆகியோர் செய்த உதவிகள், பெரிதும் பாராட்டற்பாலன. பாவை விழாக்களுக்காக மத்தியக் குழுவிற்கு மட்டும் ரூ. 25000 செலவாகியுள்ளது.

திருப்பாவை—திருவெம்பாவை மத்தியக்குழு.

**பெரிய கடைத்தெரு, மாயூரம்.**

# சிவராத்திரி விரதச் சிறப்பு

## முன்னுரை :

தமிழ்நாட்டின்கண் உள்ள சைவத் திரு மடங்கள் பற்பலவற்றுள், திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனம் என்பது ஒன்று. அவ்வாதீனத்தில் ஐந் தாம் பட்டத்துத் தலைவராக விளங்கி யிருந்த சிவத்திரு சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள் என்னும் ஞானியார் அடிகளைத் தமிழ்கூறும் நல்லு லகம் நன்கறியும் (1873—1942). அவர் கள் இவ்விருபதாம் நூற்றுண்டின் முதற் பாதியில் வாழ்ந்திருந்து, சமயவுலகுக்குப் பலதுறைகளிற் பெருந்தொண்டு புரிந் தருளிய சிறப்புடையவர். அவர்கள் சமயத் தலைமை ஏற்று வீற்றிருந்தருளிய திருக் கோவலூர் ஆதீனத்தின் முதற்பெருங் குர வர் சீலத்திரு ஆறுமுக மெய்ஞ்ஞான சிவா சாரிய சுவாமிகள் ஆவர். அவர்கள் இற் றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு விளங்கியிருந்தவர்கள். விருத்தா சலம் குமாரதேவர், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் ஆகியோர் இவர்தம் சமகாலத் தில் வதிந்தவர்களாவர். இவ்வருட் பெருந் தகையார் இயற்றியருளிய சிறந்த நூல் கள் பற்பல.

## நிட்டானுபூதி சாரம் :

அவற்றுள் 'நிட்டானுபூதி சாரம்' என் பது, முதன்மையும் சிறப்பும் உடைய தொன்று. திருக்கோவலூரில் பெண்ணை யாற்றின் நடுவில், கபிலர் குன்றின் அடி யிற் சிவபூசை செய்து நிட்டை கூடியிருந்த போது, திருக்கோவலூர் வீரட்டானேசப் பெருமான் மெய்ப்பொருள் அறிவுறுத்திப் பணித்துச் சென்றருளியபடி, திருக்கோவ லூர் ஆதீன முதற்பெருங் குரவர் நிட் டானுபூதி சாரம் என்னும் இனிய நூலை இயற்றியருளினுர். இதற்கு முத்துக் கிரு ஷ்ண பிரம்மம் என்னும் பெரியார் ஒருவர், விரிவான உரை ஒன்றை எழுதியுதவி யிருக்கின்றுர்.

"நலங்கொள்சிவ யோகமணம்
நாற்றிசையும் மணக்கும்;
ஞானமணம் கந்திக்கும்;
மோனமணம் நாறும்;
விலங்கலில்சித் தாந்தமணம்
பரிமளிக்கும்; இன்பார்
வேதாந்த மணம்கமழும்;
வேதமணம் வீசும்;
தலங்கொளும்மெய் அத்துவிதத்
திருமணமும் பரவும்;
தனிமுத்துக் கிருட்டினப்பேர்
தங்கியநம் பிரமம்
வலங்கொளும்நன் நிட்டானு
பூதிஎனும் நூற்கே
வாய்மலர்ந்த உரைஎனும்ஓர்
மாமலரின் இடத்தே."

எனத் திருவருட் பிரகாச வள்ளலார் என் னும் வடலூர் இராமலிங்க அடிகளார், இந்நூலின் உரையினைப் பாராட்டியுள் ளார்! இஃதொன்றே இந்நூலுரையின் சிறப்பினை விளக்குவதற்குப் போதிய சான்றுகும்.

## சிவராத்திரி :

இத்தகைய சிறப்பு வாய்ந்த "நிட்டானு பூதி சரரம்" என்னும் நூலின் உரையில், ஓரிடத்தில் சிவராத்திரி விரதச் சிறப்பினை விளக்கும் வகையில், புராணகதையொன்று எடுத்துக் காட்டப்படுகிறது. சிவராத்திரி

விரதச் சிறப்பினை விளக்குவனவாகப்பெரியோர்களாற் கூறப்பெறும் கதைகளுள் ஒன்ருக இருத்தலின், அதனை அவ்வுரை நூலைப் பின்பற்றி இங்கு நம் அன்பர்களுக்குத் தருகின்ருேம். கதையெல்லாம் கருத்தையே உள்ளீடாகக் கொண்டிருப்பனவாதலின், கதையின் கருத்தினையும் சாரத்தினையும்மட்டில், நாம் நம் உளங்கொண்டு கடைப்பிடித்து ஒழுகி நலம் பெறுவோமாக!

**சௌமினி கதை :**

கேகய நாட்டில் ஒரு நற்குலத்தவனுக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் சௌமினி. தன் தந்தையினுல்வேத விதிப்படி அவள் தக்கவன் ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பெற்ருள். அவள் அவனுடன் சென்று சிலகாலம் வாழ்ந்தாள். அவன் விதிவயப்படி ஏதோ நோய்வாய்ப்பட்டு இருந்து சிறிது காலத்திற்குள் இறந்துபோனுன். அதனுல் சௌமினி என்பவள் மிகவும் துக்கப்பட்டு வருந்தினுள். ஆயினும் தனது விரக மிகுதியைத் தரிக்கலாற்ருதவளாய், முறை தவறிச் சோரத்தனத்தால் ஆடவர் பலரை மருவி இன்புற்று வந்தாள். அஃது அறிந்த உற்ருர் உறவினர் முதலியவர்கள் எவ்வளவோ நற்புத்தி கூறித்தடுத்தும் திருந்தாதவளாகவே இருந்தாள். நெறி தவறிய தனது தீயொழுக்கத்தின் காரணமாக அவள் கருவுற நேர்ந்தது. அது கண்ட தாய் தந்தை முதலானவர்கள், இவளால் நம் குடும்பத்திற்கு நீங்காத பழி நேரும் என்று கருதி, ஊரை விட்டுத் துரத்தி விட்டார்கள்.

அதனுல் அவள் மிக்க கவலையுடன் ஒரு சாலை வழியே போய்க்கொண்டிருந்தாள். அப்போது ஒரு செல்வன் கண்டு அழைத்துக் கொண்டுபோய்த் தன் வீட்டில் வைத்திருந்தான். அவனைச் சேர்ந்து, அவள் புலால் உண்ணவும், கள் அருந்தவும் பழகிக் கொண்டாள். இவ்வாறு இருந்து வருங்கால், ஒருநாள் அந்தச் செல்வன் அயலூருக்குச் சென்று வரவேண்டியிருந்தது. அப்போது தனித்திருந்த சௌமினி புலால் தின்னும் வேட்கை மீதூரப் பெற்ருள். மாடுகட்டும் தொழுவத்திற் புகுந்து கள்ளுண்ட மயக்கத்தினுலே பசுவின் கன்றைப்பிடித்து, வெள்ளாடு என்று நினைத்துக் கழுத்தையறுத்தாள். வீட்டுக்குள் கொண்டு சென்ருள். விளக்கின் முன்னே அரியும்போது, பசுவின் கன்றென்று அறிந்து, ஐயோ கள்ளின் மயக்கத்தினுல் அன்ருே இங்ஙனம் பசுக்கொலை செய்ய நேர்ந்தது என்று எண்ணிச் சிறிது வருந்தினுள். எனினும் பழகிப் போனதனுல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அப்பசுங்கன்றின் ஊனைச் சமைத்து உண்டு மகிழ்ந்தாள். அதனுடைய தோல் எலும்பு முதலியவற்றைத் தெருவிற் கொண்டு போய்ப் போட்டுவிட்டு, புலிவந்து பசுவின் கன்றைக் கொன்று தின்று விட்டதாகக் கூறி, அச்செல்வன் திரும்பிவரும் வேளையிற் புலம்பிக்கொண்டிருந்தாள். உண்மையுணர்ந்த செல்வன் அவளை வெறுத்து ஒதுக்கித் துரத்தினுன்.

சௌமினி பல இடங்களில் திரிந்து, பிச்சை எடுத்து உண்டு உயிர் வாழ்ந்து வந்தாள். அவளது தீயொழுக்கமும் பாவமும் காரணமாகச் சுரம் சூலை ஈளை இருமல் தொழுநோய் என்னும் நோய்கள் பல அவளுக்கு ஏற்படலாயின. அவளது உடலினின்று முடைநாற்றம் வீசியது; கண்டார் அருவருக்கும் தோற்றம் அடைந்தாள். அவளை நெருங்கிப் பிச்சையிடவும் யாரும் விரும்பவில்லை. இவ்வாறு இடர் உழந்த அவள் இங்கும் அங்கும் அலைந்து, தேகம் இளைத்து மூப்படைந்து,பசி மேலிட்டு நடை தளர்ந்து தள்ளாடி, சிவராத்திரிப் புண்ணிய நாளில் திருக்கோகர்ணம் என்னும் சிவதலத்துக்கு அடியார்கள் போய்க் கொண்டிருக்கின்ற பாதையிலே சென்று சேர்ந்தாள். அவர்களைப் பின்பற்றிக் கொண்டு தானும் போக முயன்ருள்.

வழியில் ஒரு காளிகோயிலும், அருகே ஒரு சிவலிங்கமும், வில்வ மரமும் இருந்தன. அவள் அங்கே மாலை வேளையிற் பசி மிகுதியாற் களைத்து வீழ்ந்தாள். பின்னர்ச் சிறிது நேரம் பொறுத்துக் கண் விழித்துப் பார்த்தாள். பசியின் கொடுமையால் கீழே விழுந்து கிடந்த இலைகளை ஒவ்வொன்ருகக் கறித்துப்பார்த்துச் சுவையில்லாமை கண்டு, வெறுத்து வீசிவந்தாள். அவ்விலைகள் ஒவ்வொன்றும் தற்செயலாக

அருகேயிருந்த சிவலிங்கத்தின் மீது சென்று வீழ்ந்தன. உண்பதற்கு எதுவுமே கிடைக்காமையாற் பட்டினி கிடந்தாள்; பசியின் கொடுமையால் அவளுக்கு உறக்கமும் வரவில்லை. அன்று தற்செயலாகச் சிவராத்திரியாக இருந்தது. பனியில் நனைந்து குளிரால் வருந்திய அவள் மறுநாள் காலை அங்கேயே மரணம் அடைந்து பிணமாகக் கிடந்தாள்.

மரணம் அடைந்த அவளது உயிரைக் கைப்பற்றிக் கொண்டு செல்லக் கூற்றுவனின் தூதர்கள் வந்தார்கள். ஆனால் அவர்களைத் தடுத்து விலக்கி விட்டுச் சிவலோகத்தினின்று வந்த சிவகணநாதர்கள், சிவபிரானின் கட்டளைப்படி அவளது உயிரைத் திவ்விய வடிவமாகச் செய்தனர். நவமணிகள் பதித்து அழகு செய்த ஒளிமயமானதொரு விமானத்தில் ஏற்றிக்கொண்டு விஞ்சையர் பாடவும் அரம்பையர் ஆடவும் மிக்க சிறப்புடன் அழைத்துச் சென்றனர். முக்குண வசத்தராய் அஞ்ஞான இருளிற் புக்கவர் பொருந்துதற்கு அரியதாயும், சூரியனின் ஒளியை மின்மினிபோலச் செய்யும் பேரொளியுடையதாயும், அடைந்தவர் மீளக் கூடாததாயும், யாவர்க்கும் எளிதிற் சென்று சேர்வதற்கு அரியதாயும் உள்ள, மிகமேலான வீடுபேற்றுலகின் கண்ணே அவளைக் கொண்டு சென்று, இறைவன் இறைவியருடைய திரு முன்னிலையிலே உய்த்துப் பணிந்து நின்றனர்.

**சிவபிரானின் அருளியல்பு :**

அப்போது அந்தச் சிவகணநாதர்கள், சிவபிரானைப் பணிந்து மிக்க வியப்பும் திகைப்பும் மேலிட்டுத் தோன்ற, ''எல்லாம் வல்ல பேரருளாளராகிய பெருமானே! பழிபாவங்களையே எல்லையின்றி மிகுதியாகச் செய்து வந்த இக்கொடியவளைத் தேவரீர் எக்காரணம் பற்றி நரகத்தில் தள்ளித் தண்டிக்காமல், இச்சிவலோகத்திற்கு எல்லாச் சிறப்புக்களுடனும் அழைத்துக் கொண்டுவருமாறு எங்களுக்குக் கட்டளை இட்டருளினீர்! , ஒரு நல்வினையும் செய்தறியாத இக்கொடியவள்பால் தாங்கள் இத்தனைப் பேரருள் சுரந்தமைக்கு யாது காரணம்? அதனை அறிந்துகொண்டு உய்யும்படி எங்களுக்குத் தாங்கள் திருவுளம் பற்றல் வேண்டும்'' எனப் பணிந்து தொழுது கேட்டுக் கொண்டனர்.

அதுகேட்ட சிவபெருமான் புன்முறுவல் பூத்து ''எவ்வாற்றாலேனும் உயிர்களையெல்லாம் காத்து ஆட்கொண்டு அருள்புரிவதையே, யாம் எம் கடமையாகக் கொண்டிருக்கின்றோம். நல்லவர்களைக் காத்தல் மட்டுமேயன்றி, மிகவும் கொடிய தீயவர்களையுங்கூட, எவ்வகையாலேனும் காத்து ஆட்கொண்டு அருள்புரிய வேண்டும் என்பதே, எமது பெருவிருப்பம்! அனைத்துயிர்களும் எம்முடைய அரும்பெறற் குழந்தைகளே. எமக்கு யார்மாட்டும் எதன்கண்ணும் விருப்பு வெறுப்பு இல்லை. கூடிய வரையில், எவ்வகையான சலுகைகளையும் காட்டி உயிர்களுக்கு நன்மை செய்தலையே, யாம் பெரிதும் விரும்பி முயன்று வருகின்றோம். அப்போதுங்கூடப் பல உயிர்கள், நாம் அவற்றிற்கு அருள் செய்தற்பொருட்டு மிகவிரும்பி முயன்றாலும், அதனைப் பெறுவதற்குத் தகுதிபெற மாட்டாத நிலையிற் கிடந்து உழலுகின்றன. உயிர்களைத் தண்டித்தலில் எமக்கு நோக்கு இல்லை. அவற்றையெல்லாம் உய்யக் கொண்டு உவப்பதிலேயே எமக்குக் குறி. 'என் ஊரைச்சொன்னான் பேரைச்சொன்னான்' என்றாற்போல, ஏதேனும் ஒரு போலிக்காரணம் பற்றியும் உயிர்களை வலிந்து ஆண்டு கொள்வதே எமது பேரருளுக்கு இயல்பாக இருக்கின்றது.

**சிவராத்திரி விரதம் :**

இவள் உணவு கிடையாமையால் சிவராத்திரி நாளிற் பட்டினி கிடந்தாள்; பசியின் கொடுமையினால் வருந்தி அன்று இரவு முழுவதும் உறக்கம் கொள்ளாமல் விழித்துக் கொண்டே கிடந்தாள். உணவு இன்றியும் உறக்கம் வராமலும் கிடந்த இவளைச் சிவராத்திரி விரதம் கடைப்பிடித்தவளாக யாம் எம் அருளியல்பாற் கருதிக் கொண்டோம். தங்குவதற்கு இடம் கிடைக்காமல் பல இடத்தும் அலைந்து திரிந்து இவள் பனியில் நனைந்ததனை, யாம் இவள் நீராடித் தூய்மை பேணியதாகப் பரிவுடன் ஏற்றுக்கொண்டோம். தின்னமுயன்று சுவையின்மையால் இவள் வீசி எறிந்த வில்வ இலைகள் சிவலிங்கத் திருவுருவின்


மேற் சென்று விழுந்ததனை, இவள் செய்த அருச்சனை என்று யாம் இரக்கத்தால் விரும்பி இசைந்து கொண்டோம். மேலும் வழியில் இவள் அடியார்களைக் கண்டாள். அவர்களோடு சேர்ந்து அவர்களைப் பின்பற்றிச் சிறிது தூரம் நடந்தாள். அதனால் சற்சங்கம் அல்லது நல்லிணக்கம் என்னும் அடியார் கூட்டுறவைப் பெற்றுப் புனிதம் எய்தினாள்.

சிவராத்திரியில் நீராடித் தூய்மை பேணியும், பட்டினிகிடந்து கண்விழித்தும், அடியாரோடு கூடியும் அருச்சனை புரிபவர்களுக்கு, எல்லா நலங்களும் வீடுபேறும் எளிதிற் கிடைத்தல் திண்ணம். ஆதலால் இவளும் இப்பேற்றுக்கு உரியவளாயினள். இவ்வாற்றால் சிவராத்திரி விரதச் சிறப்பின் பயனை உணர்ந்து கொண்டு உலகுயிர்களெல்லாம் உய்தி பெறல் வேண்டும் என்பதற்கே, யாம் இங்ஙனம் செய்தருளினோம்" என்று சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினார்.

முடிவுரை:

இவ்வரலாறு பிரம்மோத்தர காண்டம் என்னும் நூலில் உள்ளது. இதுபோன்ற வேறுபல கதைகள், சிவதருமோத்தரம் சிவராத்திரிப் புராணம் முதலிய நூல்களிலும் காணப்படும். இறையருட் பேற்றை எளிதில் அடைவிக்கும் சிவராத்திரி போன்ற சிறந்த விரதங்களைக் கடைப்பிடித்து, நாம் அனைவரும் நலம்பலவும் பெறுவோமாக!

—ஆசிரியர்



ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் (உற்சவமூர்த்தி, தேவியருடன்), வளையமாதேவி.

# திருவேற்காடு

**முன்னுரை :**

திருவேற்காடு என்னும் தலம் தொண்டை நாட்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னைக்கு மேற்கே பூவிருந்தவல்லியில் இருந்து ஆவடிக்குச் செல்லும் சாலையில் இரண்டுகல் தொலைவில், காடுவெட்டியாறு என வழங்கும் பழைய பாலாற்றின் வடகரையில் அமைந்து விளங்குகின்றது.

**திருவேற்காடு :**

காஞ்சிபுரத்திற்கு மூன்று யோசனை தூரம் வடகிழக்கிலும், வங்காள விரிகுடாக் கடலுக்கு ஒரு யோசனை தூரம் மேற்கிலும், திருப்பாசூர்க்குத் தென்கிழக்கிலும், திருமயிலைக் கபாலீச்சரத்திற்கு வடகிழக்கிலும் திருவேற்காடு அமைந்து திகழ்வதாகப் புராணம் கூறுகின்றது.

"பார்புகழும் காஞ்சி ஏகாம்
பரற்குயோ சனைஓர் மூன்று
நேர்பெறும் ஈசா னத்தில்
நீடுபூ ருவத்தின்; வாரிக்கு
ஏர்கொள்யோ சனைமேற் பாலில்;
எழில்திருப் பாசூர்க்கு அங்கி
ஆர்திசை தனில்; கபாலீச்
சரத்தினுக்கு அனில திக்கில்"

—திருவேற்காட்டுப் புராணம்.

இத்தலம், ஒரு காலத்தில் வேல மரக் காடாக இருந்ததனாலும், வெள்வேல மரமே இங்குத் தல விருட்சமாக இருப்பதனாலும், இதற்குத் திருவேற்காடு எனப் பெயர் வழங்குவதாயிற்று.

**வடமறைக்காடு :**

இறைவன் தான் மேற்கொள்ளும் திருவுருவங்களுக்கு ஏற்ப, வேதங்களையும் வடிவம் எடுக்கும்படி கட்டளை இட்டிருந்தார். அதனால் திரிபுரதகன காலத்தில் நான்கு குதிரைகள் ஆகவும், அருச்சுனனின் தவநிலை கண்டு அருள்புரிவதற்கு வேட வடிவம் கொண்டு சென்ற சமயத்தில் நாய்கள் ஆகவும், தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் ஆடிய பொழுது காற்சிலம்புகள் ஆகவும், பிட்சாடனக் கோலம் கொண்ட பொழுது கோவணம் ஆகவும் வடிவம் கொண்டு விளங்கிய வேதங்கள், இத்தலத்தில் தல விருட்சமாகிய வெள்வேல மரமாக விளங்கிவரும் காரணம் பற்றி, இதற்கு வேதவனம் வேதாரண்யம் மறைக்காடு எனவும் பெயர்கள் உண்டு. தெற்கே அப் பெயர் பெற்று விளங்கும் சிறந்த தலம் வேறு ஒன்று இருப்பதனால், அதனோடு இதனிடை வேறுபாடு விளங்க உணர்த்துதற்பொருட்டு, இதனை வட(க்கு) வேதாரணியம் எனவும், வடமறைக்காடு எனவும் பெரியோர்கள் வழங்கி மகிழ்வர்.

**வழிபட்டோர் :**

இத்தலம், சிவபெருமான் திருக்கயிலையில் நிகழ்ந்த தமது திருமணக் கோலத்தின் சிறப்பினை, அகத்தியர் பொருட்டுக் காட்டியருளிய பெருமை யுடையது. திருமணக்கோலம் கொண்ட பார்வதி பரமேசுவரர் திருவுருவம், மூலத்தானத்தில் அழகுற அமைந்துள்ளது. பிரமனைப் பிரணவப் பொருள் கேட்டுச் சிறையில் அடைப்பித்த முருகப் பெருமான், பிரமனைச் சிறைவீடு செய்யுமாறு சிவபிரான் பணித்த வழியும்

சிறிது மறுத்த பிழை தீரும் பொருட்டு, இங்கு வழிபட்டார். விநாயகர் பிரமன் இந்திரன் பரசுராமன் பராசரர் திக்குப் பாலகர்கள் ஆகிய பலர், இங்கு இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இந்திரன் பூசித்த கோயில், வேற்காட்டு நாதர் கோயிலுக்குக் கீழ்த்திசையில் தனிக் கோயிலாக அமைந்துள்ளது. இத்தலத்தில் உள்ள வேத தீர்த்தத்தில் ஞாயிறு தோறும் நீராடி இறைவனை வழிபட்டு வந்தால், அங்கம் குறைந்த பெருநோயாளரும் நோய் நீங்கி நலம் பெறுவர். இது விஷம் தீண்டாத மகிமையை யுடைய தலம். திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு ஒரு திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். அருணகிரிநாதர் அருளிய இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் இதற்கு உண்டு.

"ஒள்ளி துள்ளக் கதிக்காம் இவன்ஒளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யார்உயர்ந் தார்இவ் வுலகினில்
தெள்ளி யார்அவர் தேவரே"

மூரல் வெண்மதி சூடும் முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே

விண்ட தாம்பொருள் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே"

## மூர்க்க நாயனார் :

இந்தத் தலம், சைவசமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய, மூர்க்க நாயனார் என்பவர் அவதரித்த சிறப்புடையது. மூர்க்கநாயனார், தொண்டைநாட்டிலுள்ள திருவேற்காட்டில், வேளாளர் குலத்தில் தோன்றியவர். அடியார்களுக்கு அமுதளிக்கும் கடப்பாடு மேற்கொண்டவர். அதனால் செல்வம் தேய்ந்து வறுமை அடைந்தபோதும், தமது மனம் தளராமலும், திருத்தொண்டை விடாமலும், திருக்குடந்தை (கும்பகோணம்) சார்ந்து, தாம்முன்பு கற்று வன்மை பெற்றிருந்த சூதாட்டத்தால் பொருள்தேடி, அப்பொருளைத் தாம் தீண்டாமல், அடியார்களுக்கு அமுது செய்விப்பவர் கொள்ளும்படி செய்து, தாம் கடைசிப் பந்தியில் அமர்ந்து உண்டிகொண்டு தொண்டாற்றி அருள்பெற்றனர். சூதாடுங்கால் முதலில் தாம் தோல்வியுற்று, முதற்பணயத்தின் பொருளைத் தம்முடன் ஆடுபவரே எடுத்துக் கொள்ளும்படி செய்து, பின்னர் ஆடும் சூதுகளில் பெரும்பொருள் ஈட்டுவது இவர்தம் வழக்கம். அப்போது ஆட்டத்தில் பொய்பேசி அழிவழக்குச் செய்துமறுப்பவர்களை, இவர் சுரிகை (குறுவாள்) உருவிக் குத்தி ஒறுக்கவும் தயங்கார். ஆதலின் இவர்க்கு நற்சூதர் எனவும், மூர்க்கர் எனவும் பெயர் வழங்குவதாயிற்று. இங்ஙனம் சூதாடிப் பொருளீட்டியும், அடியார்க்கு அமுதளித்து மகிழும் அறத் தொண்டில் தலைநின்ற மூர்க்க நாயனார் அவதரித்த திருத்தலம், திருவேற்காடு! இதனை,

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை
வளநா டதனில் வயல்பரப்பும்
நன்னித் திலவெண் திரைப்பாலி
நதியின் வடபால் நலங்கொள்பதி,
அன்னப் பெடைகள் குடைவாவி
அலர்புக் காட அரங்கினிடை
மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள்
விழாவிற்கு ஆடு வேற்காடு

எனச் சேக்கிழார் பெருமான், தமது பெரிய புராணத்தின்கண் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளார்.

## முடிவுரை :

இங்குள்ள இறைவனுக்கு வேற்காட்டு நாதர் என்றும், அம்பிகைக்கு வேற்கண்ணி அம்மை என்றும் பெயர். வேதபுரீசுவரர், பாலாம்பிகை என்னும்பெயர்களும் வழங்


கும். சமீபகாலத்தில் இத்தலத்தில் வேறு ஒரு கோயில் ஏற்பட்டுள்ளது. அங்கு ஸ்ரீதேவி கருமாரியம்மன் எழுந்தருளி, மிக்க அருளாற்றல் வாய்ந்து, சிறந்த வரப் பிரசாதியாக விளங்கி வருகின்றார். ஆயிரக் கணக்கான அன்பர்கள் வாரம் தோறும் அங்குச் சென்று வழிப்பட்டுத் தாம்தாம் விரும்பும் நலங்களைப்பெற்று வருகின்றனர். அஃது ஒரு சிறந்த பெருங்கோயிலாக வளர்ந்து கொண்டு வருகின்றது.

திருவேற்காட்டுப் பாலாம்பிகையையும், திருவலிதாயம் ஜகதாம்பிகையையும், திருவொற்றியூர் வடிவாம்பிகையையும் ஒரே நாளில் வழிபடுபவர்கள், இம்மையிலும் மறுமையிலும் எல்லா நலன்களும் பெறுவர். இங்ஙனம் வழிபடும் முறை தொன்று தொட்டுப் பெரியோர்களால் ஒருமரபாகக் கருதிப்போற்றப்பெற்று வருகின்றது.


— ஆசிரியர்.

சிறந்திடும் காசி தன்னில்
திகழ்தரும் காஞ்சி; அன்ன
அறந்தழை தலத்தின் மேலாய்
அதிகமாம் வேற்காடு; அங்கண்
பிறந்தவர் வசித்தோர் பேசும்
பெற்றியால் மரித்தோர் எல்லாம்
நிறைந்தபே ரின்ப வீட்டில்
நிலவுவர் நீங்காது என்றும்.

—தலபுராணம்.



திருவேற்கர்டு கோயில் தோற்றம்



திருவேற்காட்டு நாதர் பாலாம்பிகை.

# சிறுவரம்பேடு

(திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ.)

**முன்னுரை :**

தொண்டை நாட்டில் செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டத்தில், சின்னம்பேடு எனப்படும் ஒரு சிற்றூர் உள்ளது. அஃது ஓர் அமைதியான சூழ்நிலை வாய்ந்த அழகியதொரு கிராமம். சென்னையில் இருந்து சுமார் 20 கல் தொலைவில் உள்ளது. சென்னை–நெல்லூர் நெடுஞ்சாலைப் பிரிவில் இருந்து 4 கல். ஆரணி செல்லும் பேருந்து இக்கிராமத்தின் வழியே செல்லுகின்றது.

**அருணகிரியார் :**

தொண்டைநாட்டில் உள்ள புகழ்பெற்ற முருகன் தலங்களுள், சின்னம்பேடு என்னும் இவ்வூரும் குறிப்பிடத்தக்க சிறப்புடைய தொன்றாகத் திகழ்கின்றது. கி. பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதப் பெருமான், இத்தலத்திற்கு எழுந்தருளி, இங்கே உள்ள ஸ்ரீபால சுப்பிரமணியர் என்னும் முருகப்பெருமானைத் தரிசித்து, நான்கு திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்துள்ளார். அத்திருப்புகழ்ப்பாடல்களினால், இப்போது சிற்றூராக உள்ள சின்னம்பேடு என்னும் இந்தக் கிராமம், ஏறத்தாழ 500—600 ஆண்டுகட்கு முன்னரே, மிகவும் புகழ் பெற்ற ஒரு பெரிய நகரமாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது. அருணகிரிநாதர் தம்முடைய திருப்புகழ்ப் பாடல்களில், இந்தச் சிறந்த முருகன் தலத்தினைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்.

**திருப்புகழ் :**

"தேவர்களின் தலைநகரமாகிய அமராவதியைக் காட்டிலும் பெரும் சிறப்புடைய தாய், மிக்க செல்வச் செழிப்பு வாய்ந்த குபேரனின் தலைநகரமாகிய அளகாபுரி நகரத்தினையும்விட மேம்பட்டுச் சிறந்து, திருமகள் நிலையாகத்தங்கி வாழ்கின்ற சிறுவாபுரி."

"பொன்னால் செய்ய பெற்றது போன்ற அழகுமிகுந்த கோபுரம், பெரிய மதில், கோயில், விசாலமான பல அழகிய வீதிகள் நிறைந்துள்ள சிறந்த சிறுவாபுரி."

வானவர் ஊரிலும் வீருகி வீறு அள
காபுரி வாழ்விலும் மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வே! சுராதிபர் பெருமாளே!

ஆடகம் பயில்கோபுரம் மாமதில்
ஆலயம் பல வீதியு மேநிறை
வான தென்சிறுவாபுரி மேவிய பெருமாளே (2)

என்றெல்லாம் அருணகிரிநாதர் இத்தலத்தின் அருமை பெருமைகளை மிக்க சிறப்பான முறையில் எடுத்துப் புகழ்ந்து போற்றியிருக்கின்றார். இதனால் இவ்வூரும் கோயிலும் பழங்காலத்தில் மிக்க எழிலும் வளமும் நிறைந்து விளங்கியது எனக் கொள்ளுதல் மிகையாகாது.

**தலவரலாறு :**

மேலும், இத்தலத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பினையும் அருணகிரிநாதர் தமது திருப்புகழில் அழகாக எடுத்துக்காட்டி

யிருக்கின்றார். இராமபிரானின் புதல்வர்கள் ஆகிய லவன்—குசன் எனும் இருவரும் வான்மீகி முனிவரால் வளர்க்கப்பெற்று விற்பயிற்சி முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்று விளங்கியிருந்தனர். சென்னைக்கு அருகேயுள்ள கோயம்பேடு என்பது வான்மீகி முனிவரின் ஆசிரமமாகத் திகழ்ந்தது. அங்கேதான் லவ—குசர்கள் வளர்ந்து கலைப்பயிற்சிகள் பெற்றுவந்தனர், என்பர். அவர்கள் பின்னர் அங்கிருந்து இங்குவந்து சிலகாலம் தங்கியிருந்தனர். அப்போது இராமபிரான் அசுவமேதம் என்னும் வேள்விசெய்து தம் வெற்றிக்கு அறிகுறியாக விடுத்த குதிரைகள், அரசர்கள் எவராலும் தடை செய்யப்படாமல், நாற்றிசைகளிலும் சென்று வெற்றிப் பெருமிதத்துடன் மிக்க மிடுக்குடன் வந்து கொண்டிருந்தன. அவைகள் தெற்கு நோக்கி இங்குவந்தபோது, அவற்றை லவ—குசர்கள் தடுத்து நிறுத்தினர். அதனால் ஒருவரையொருவர் அறியாத நிலையில், தந்தையாகிய இ ர ா ம பி ர ா னை எதிர்த்து மைந்தர்களாகிய லவ குசர்கள் போர்புரிய நேர்ந்தது. அப்போது இராமபிரானோடு போர்புரிந்து அவரை வெற்றி கொள்ளும்பொருட்டுச் சிறியவர்களாகிய லவ குசர்கள் அம்பு எடுத்தனர். அங்ஙனம் லவ குசர் ஆகிய சிறுவர் அம்பு எடுத்த இடம் ஆதல்பற்றி, இவ்வூருக்குச் சிறுவரம்பேடு என்னும் பெயர் உண்டாயிற்று. இவ்வரலாற்றுக் குறிப்பைப் பின்வருமாறு அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

சிறுவ ராகி இருவர் அந்த கரிபதாதி
  கொடு பொருஞ்சொற்
சிலை இராமனுடன் எதிர்ந்து சமராடிச்
செயமதான நகர் அமர்ந்த அளகைபோல
  வளம் மிகுந்த
சிறுவை மேவி வரம் மிகுந்த பெருமாளே. (3)

இங்ஙனம் அருணகிரிநாதர் குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சிக்கேற்ப, சிறுவர் + இருவர் + அம்பு + எடுத்த ஊர் என்பது மருவி, சிறுவரம்பேடு எனத்திரிந்து, இந்நாளில் சின்னம்பேடு என்று மக்களால் வழங்கப்பட்டு வருகின்றது. திருப்புகழில் இதனைச் சிறுவை என்றும், சிறுவாபுரி என்றும், அருணகிரிநாதர் அழகுற வழங்கியுள்ளார்.

**கோயில் அமைப்பு :**

இத்தலத்திலுள்ள பாலகுமாரசுவாமி என்னும் முருகனின் திருவுருவம், மிகவும் அழகுவாய்ந்தது. அருகேயுள்ள ஆண்டார்குப்பம் என்னும் தலத்திலுள்ள முருகனின் திருவுருவத்தைவிட, இது சற்றுச் சிறியது. கொடிக்கம்பத்தில் முன்னேயுள்ள மயிலும் மிக்க அழகும் நேர்த்தியும் உடையது. விநாயகர் புன்முறுவல் பூத்த முகத்தினராய்ப் பொலிகின்றார். கோயிலின் உள்ளே அண்ணாமலை நாதரும், உண்ணாமுலையம்மையும், தனிக்கோயில் கொண்டு உள்ளனர். இங்குள்ள முருகனைத் தண்டமிழில் மிகு நேயர் என்றும், அடியார்கள் சிந்தை குடிகொண்டவர் என்றும், திருப்புகழ் போற்றிப் புகழ்கின்றது.

தண்டரள மணிமார்ப செம்பொன்எழில் செறிரூப
  தண்டமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமும் அடியார்கள் சிந்தையுறு குடியான
  தண்சிறுவை தனில்மேவு பெருமாளே. (4)

இங்கே ஒரு பெருமாள் கோயிலும், உள்ளது. திருவூரகப்பெருமாள் என்பது திருநாமம். அவரது திருவுருவமும் பேரழகு வாய்ந்தது. தீண்டாத திருமேனி. ஆண்டுக்கு ஒருமுறை தேன் அபிடேகம் நிகழ்கின்றது. தேனைச் சீலையில் நனைத்துப் பிழிவதுதான் வழக்கம்.

**முடிவுரை :**

இத்தகைய சிறந்த தலத்திற்குத் திருப்பணிசெய்ய, ஊர்ப் பொதுமக்களும் பிறரும் முன்வந்துள்ளனர். அதற்கென ஒரு திருப்பணிக் குழுவும் அமைக்கப் பெற்றுள்ளது. திரு. ராக்கியப்ப முதலியார் திருப்பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றுள்ளார். அண்மையில் நிகழ்ந்த திருப்பணித் துவக்க விழாவில், அறநிலைய ஆணையர்-துணை ஆணையர் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முருகன் அடியார்கள் பலரும், அன்பர்கள் பிறரும், திருப்புகழ்ப் பாடல்பெற்ற இத்தலத்தைத் தரிசித்துப் பயனடைவார்களாக.

# மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

**வீடுமரது விரதத்தின் உறுதி :**

விசித்திரவீரியன் இளம் பிள்ளையாதலால் அவனை அரசனுக்கிச் சத்தியவதியின் சொற்படி பீஷ்மரே அரசாட்சியை மேற்கொண்டு மக்களுக்கு நன்மை செய்தார். விசித்திர வீரியன் யௌவனப் பருவம் அடைந்தான். காசி மன்னனுடைய கன்னியர் மூவர்க்கும் சுயம்வரம் என்று அழைப்பு வந்தது. பீஷ்மர் தாயாரிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரே தேருடன் காசி தேயத்தை யடைந்தார்.

அங்கம் வங்கம் கலிங்கம் மச்சம் மராடம் என்ற பலதேயத்து மன்னர்களும் சென்று கூட்டமாகக் குவிந்திருந்தார்கள். சுயம்வர மண்டபத்தில் எல்லாரும் நட்சத்திர கணம்போல் அமர்ந்திருந்தார்கள். பீஷ்மர் சூரியனைப் போல் வெகு சிறப்பாக ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கூட்டத்தில் இருந்த சில அற்பர்கள் "முதிர்ந்தவரும், தருமந்தெரிந்தவரும் நரையுந்திரையும் உடையவருமாகிய இந்தப் பீஷ்மர் நாணம் இன்றி இங்கு ஏன் வந்திருக்கின்றார்? தான் செய்த உறுதியைக் கை நழுவ விட்டு விட்டார் போலும்; பிரம்மசாரியென்று வீண் புகழ் பெற்றார் போலும்" என்று மெல்லப் பேசிக் கொண்டு சிரித்தார்கள். அந்த அற்பரது புன்மையான சொற்களைக் கேட்டுப் பீஷ்மர் கோபித்தார். அரச சிம்மம் எழுவது போல் எழுந்தார். மாலைகளுடன் வந்து அழகின் சிகரங்களாக அவையில் நிற்கின்ற அம்பை அம்பிகை அம்பாலிகை என்ற மூன்று கன்னிகைகளையும் தன் தேர்மீது ஏற்றிக் கொண்டார். மேகம் இடிப்பது போன்ற குரலுடன் அந்த அரசர்களை நோக்கிக் கூறுவார்.

"வேந்தர்களே! மனுவறத்தில் எட்டுத் திருமணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த எட்டுத் திருமணங்களுக்குள் இராக்கத மணம் என்பதுவே மன்னவர்க்குச் சிறந்தது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். வலிமையால் கொண்டு போய்ச் செய்யும் திருமணம் அற நூலார் ஒப்புக்கொண்டது. ஆதலால் நான் இப்பெண்களைப் பலாத்காரமாகக் கொண்டு போகக் கருதுகிறேன். ஆண்மை யிருந்தால் நீங்கள் என்னுடன் போர் புரியலாம் என்று, காசி மன்னனையும் மற்ற மன்னர்களையும் பார்த்துக் கூறினார். எல்லோரும் சீற்றம் அடைந்து ஆயுதங்களை ஏந்திக் கொண்டு போர் செய்யத் தொடங்கினார்கள். நாலா பக்கங்களிலிருந்தும் பீஷ்மர் ஒருவரை அத்தனை மன்னர்களும் எதிர்த்தார்கள். பதினாயிரம் பாணங்களை எய்தார்கள். மலைமீது மழைபொழிவது போல் பாணமழை பொழிந்தார்கள்.

பீஷ்மர் விளையாடுவதுபோல் சிரித்துக் கொண்டே அத்தனை பாணங்களையும் அழித்து எல்லோரையும் தடுத்துக் கணைகளால் இடர்ப்படுத்தினார். அது தேவாசுர யுத்தம்போல் காட்சியளித்தது. மிகுந்த அச்சத்தை விளைவித்தது. மனிதத் தன்மையை மீறிப் பீஷ்மர் கடும் போர் புரிந்தார். ஒரு தேருடன் போர்க் களத்தில் பீஷ்மர் உலாவினார். அவருடைய வீரத்தைக் கண்டு பகைவரும் அவரைக் கொண்டாடினார்கள். கரவேக சரவேகத்தால் அத்தனை வேந்தர்களையும் வென்றும் பல

ரைக் கொன்றும் வெற்றி மாலே சூடிக் கொண்டு, பீஷ்மர் அக்கன்னியர்களுடன் அத்தினபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சாலவராஜன் மிகுந்த வீரத்துடன் பீஷ்மரைத் தொடர்ந்து "நில் நில்" என்று கூறிக்கொண்டு வந்தான். அக்கன்னியர் மீது காதலால் சாலவ மன்னன் பீஷ்மருடன் கடும் போர் புரிந்தான். பீஷ்மரை அநேக பாணங்களால் அடித்தான். மற்ற மன்னர்கள், "நல்லது நல்லது" என்று கூறி அவனேக் கொண்டாடிஞர்கள். பீஷ்மர் பாம்பைக் கருடன் எதிர்ப்பதுபோல் அவனே எதிர்த்துச் சிரித்துக் கொண்டே, அவனுடைய தேரையும் தேர்ப்பாகனேயும் வில்லேயும் அழித்து, அவன் உடம்பைத் துளேத்தார். தோல்வி யடைந்த சாலவன் ஓடிஞன். மற்ற அரசர்கள் இந்தப் போரைப் பற்றியே பேசிக் கொண்டு தங்கள் தங்கள் நகரத்திற்குச் சென்ருர்கள்.

பீஷ்மர் அந்த இளங் கன்னிகைகளேத் தன் மருமகளேப் போலவும் உடன் பிறந்தாரைப் போலவும், புத்திரிகளேப் போலவும் கருதி அன்புடன் அழைத்துக் கொண்டு, அத்தினபுரம் வந்து சேர்ந்தார். தந்தையாகிய சந்தனுவைப் போலவே, உலகை நன்கு பரிபாலித்துக் கொண்டிருந்த தம்பி விசித்திரவீரியனிடம், அப்பெண்களே ஒப்படைத்தார். நினேக்கவும் முடியாத இந்த வீரச் செயலே உலகம் புகழ்ந்து வியந்தது. பீஷ்மர் தாயாருடன் தம்பியின் திருமணத்தைக் குறித்து ஆலோசனே செய்தார். மூத்தவளான அம்பை பீஷ்மரைப்பார்த்து, "தரும சீலரே! போரில் முந்திய சாலவ மன்னனே மனத்தால் வரித்திருந்தேன். அவன்மீது எனக்குக் காதல் உண்டு. அவனும் என்னே வரித்திருந்தான். என் பிதாவுக்கு இதில் உடன்பாடு உண்டு. நீர் எல்லாம் தெரிந்தவர். உமது விருப்பம் போல் செய்யும்" என்ருள்.

பீஷ்மர் "அம்மா! விண்ணுலகமும் மண்ணுலகமும் பெண்ணுலகத்தால் தான் பீடு பெறுகின்றது. பெண்ணறம் பெருமையுடையது. அதனேக் காப்பது எங்கள் போன்ருருடைய தலேப்பாரம். மனத்தால் வரித்தபின் வேறு ஒருவனே மணப்பது கூடாது. மற்றெருவனே விரும்பிய உன்னே நான் இங்கே வைத்திருப்பது முறையன்று. ஆனல், மன்னவன் என் தம்பி தான். நான் ஆலோசனே மட்டுமே சொல்லும் உரிமை உரிமையுடையவன். ஒரு கருமத்தை நடத்தும் உரிமை அவன்பால் இருக்கின்றது. தம்பியைக் கேட்டு உனக்கு நன்மையைச் செய்வேன்" என்று கூறினர்.

பின்னர் அம்பையின் முன்பு தம்பியை அழைத்து, அவளது கருத்தையறிவித்தார். விசித்திர வீரியன், "அண்ணு! இவள் பிறனே விரும்பினல் அதற்கு மாருக நான் இவளே விரும்பேன்; பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றுவதே வேந்தருடைய கடமை. வழிச்செலவும் தக்க துணேயும்கூட அனுப்புவேன். ஒரு சமயம் இவளேச் சாலவன் ஏற்க மறுத்தால், மீளவும் இவளே ஏற்குமாறு தாங்கள் எனக்குக் கட்டளே யிடாமல் இருக்குமாறு வேண்டுகின்றேன்" என்ருன்.

பீஷ்மர் "தம்பீ! இந்தத் தருமத்தில் உன் சித்தம் நிலேத்திருப்பதாக. உன் மனம் எப்போதும் பிறருக்கு உதவி செய்வதில் ஊக்கமுடையதாக இருப்பதாக" என்ருர். அம்பை "சாலவ மன்னன் என்னே ஒரு போதும் மறுக்கமாட்டார், வாழைப் பழத்தை வானரம் வேண்டாம் என்று மறுக்குமா?" என்ருள். அம்பையைப் பல்லக்கில் ஏற்றி, பணிப் பெண்கள் காவலர்களேத் துணேக்கு அமைத்து அனுப்பி விட்டு, பீஷ்மர் அம்பிகை அம்பாலிகை என்ற பெண்களே விசித்திர வீரியனுக்கு விவாகம் புரிந்து வைத்தார்.

அம்பை சாலவனிடம் சென்று "என் அன்பரே! நீர் என்னல் வரிக்கப்பட்டவர். பீஷ்மரிடம் நான் அனுமதி பெற்றுக் கொண்டு வந்தேன். என்னே விதிப்படி நீர் விவாகம் புரிந்து கொள்ளும்" என்று வேண்டினள்.

சாலவன் "அழகியவளே! போரில் என்னே வென்று வீடுமர் உன்னேக் கவர்ந்தார். தோல்வி யடைந்த நான் உன்னே ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீ வீடு

மரையே அடைவாய். அதுவே உனக்கு ஏற்றது" என்றான்.

அம்பை மீண்டும் அத்தினபுரத்தை யடைந்து பீஷ்மரைக் கண்டு, "சாலவன் என்னை மறுத்து விட்டான். ஆதலால் திரும்பி வந்த என்னைத் தங்கள் தம்பிக்கே கல்யாணம் புரிந்து வையுங்கள்" என்றாள்.

பீஷ்மர் சிரித்து "அம்மா! இது பெண்ணறத்துக்கே இழுக்கு. அவன் அப்போதே ஏற்க மறுத்துவிட்டானே! நான் அவனை அறமல்லாத நெறியில் ஏவமாட்டேன். நீ சாலவனிடமே செல்" என்றார்.

அம்பை மீளவும் சாலவனைக் கண்டு "அன்புள்ளவரே எப்படியும் நீர் தான் என் கணவர், நம்பி வந்த என்னை நட்டாற்றில் தள்ளாதீர். நாம் இருவரும் மனம் ஒத்து வாழலாம்" என்றாள். அவன் அவளை இகழ்ந்து விலக்கினான். அம்பை மீளவும் பீஷ்மரிடம் வந்து அவரைப் பணிந்து கூறுவாள்.

"வீரரே! நீர் தானே என்னை வெற்றியால் கொணர்ந்தீர். அதனால் நான் உமக்குத் தான் உரியவள்; ஆதலால் என்னை நீரே மணந்து கொள்ளும்" என்றாள். பீஷ்மர் "அம்மா! நான் என் தந்தையின் பொருட்டு மாதரை மனத்தாலும் தீண்டாத விரதம் உடையவன். இரும்பை எறும்பு விரும்புவது போல் இருக்கிறது உன் எண்ணம். இது சாலப்பிழை. மாறி மாறிப் பலரை நீ விரும்புகின்றாய். இது இழிவான நடை. மண்ணும் விண்ணும் அழிந்தாலும் என்னுடைய உறுதியழியாது. நீ என் மகள். நான் உன்னை விரும்பேன். நீ செல்" என்றார். அம்பை ஆறு ஆண்டுகள் அத்தினபுரத்தில் இருந்து பீஷ்மரை வேண்டினாள். சாலவனிடம் போவதும், பீஷ்மரிடம் திரும்பி வருவதுமாகப் பல முறை அலைந்தாள். போக்கு வரவில் ஓர் ஆறு ஆண்டுகள் கழிந்தன.

அம்பை கண்ணீரினால் பூமியை நனைத்துக் கொண்டே பிதாவிடம் போய் நடந்ததைச் சொன்னாள். பீஷ்மர் பரசுராமருடைய சீடர். அவர் கூறினால் குரு வார்த்தைக்கு மறு வார்த்தை கூறாது பீஷ்மர் மணந்து கொள்வார் என்று அமைச்சர்கள் கூறினார்கள். அம்பை மேற்கடலிடம் தவம் புரியும் பரசுராமரிடம் போய்ப் பணிந்தாள். அவர் "உனக்கு நல்ல கணவன் வரட்டும்" என்று வாழ்த்தினார். "தங்கள் மாணவர் காங்கேயனுக்கு என்னைத் திருமணஞ் செய்து கொடுங்கள்" என்று வேண்டினாள். அவசர புத்தியுடைய அவர் "அப்படியே ஆகட்டும்" என்று கூறி அவளை அழைத்துக் கொண்டு அத்தினபுரம் வந்தார். பீஷ்மர் அவரை அதிக வணக்கத்துடன் வரவேற்புச் செய்து வணங்கினார்.

"காங்கேயா! இவளை நீ மணஞ் செய்து கொள்" என்றார். பீஷ்மர் 'குருநாதா! அடியேன் தந்தையின் பொருட்டுப் பிரம்மசரிய விரதம் பூண்டவன். சூரியனிடத்திலிருந்து வெப்பத்தையும், சந்திரனிடத்திலிருந்து தட்பத்தையும், பிரித்தாலும் பிரிக்கலாம்; அடியேனிடத்திலிருந்து சத்தியத்தைப் பிரிக்க முடியாது. இவளை நான் தொடேன்" என்றார். பரசுராமர் ஆலகாலம் போல் கொதித்து எழுந்தார். பரசுராமருக்கும் பீஷ்மருக்கும் பதினைந்து நாட்கள் போர் நிகழ்ந்தது. சத்தியந்தானே வெல்லும்? பரசுராமர் தோல்வியடைந்து புறங்காட்டி ஓடினார். பீஷ்மர் அவரைக் கை கூப்பித் தொழுதார்.

பரசுராமர் தோற்றதை ஒரு புறம் நின்று பார்த்துக் கொண்டிருந்த அம்பை நடுங்கினாள். இமயமலைச் சரிவில் பாஹுதா நதிக்கரையில் ஒரு காலின் கட்டை விரலில் நின்று வெற்றித் தெய்வமாகிய முருகவேளை வேண்டிப் பன்னிரு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தாள். முருகவேள் அவளுக்கு முன்னே தோன்றித் தேவலோகத்து மாலையைத் தந்து "இதனைத் தரித்துக் கொள்பவனால் பீஷ்மருக்கு முடிவு வரும்" என்று கூறி மறைந்தருளினார்.


அம்மை அந்த மாலையை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு தேயத்து மன்னனிடமும்போய் இம்மாலையை அணிந்தவன் பீஷ்மனைக் கொல்வான். அப்படிக் கொன்றவனை நான் மணப்பேன்" என்று ஐந்து

ஆண்டுகள் அலைந்தாள். பீஷ்மரிடம் உள்ள அச்சத்தால் எந்த அரசனும் இணங்கவில்லை. புலியை எதிர்க்க எந்த எலி இசையும்?

முடிவில் அவள் பாஞ்சால நாட்டையடைந்து, சிறந்த வில்லாளியாய், உறுதியும் புகழும் படைத்த துருபத மன்னனிடம் சென்று "வேந்தே இது குமாரக் கடவுள் தந்த மாலை. இதனை நீ தரித்துத் கொள். என் வாழ்வைக் கெடுத்த அந்தப் பீஷ்மனை நீ கொல்க. என் கவலையை மாற்று. உன்பால் தஞ்சம் புகுந்தேன்" என்றாள்.

துருபதன் "அரசகுமாரியே! நான் எல்லா அரசர்களோடும் பகை செய்துகொள்வேன். ஆனால் வடவைத்தீயினும் வெப்பமான பீஷ்மரைப் பகைக்க மாட்டேன். அவர் என் குலத்தையே எரித்து விடுவார். நீ இங்கே வந்துபோனதாக அவர் அறிந்தால் எனக்கு ஆபத்து. வேண்டாம். உனக்கு வணக்கம் செலுத்துகின்றேன். நீ புறப்பட்டுச் செல்" என்றான்.

அம்பை அந்த மாலையைப் பாஞ்சால ராஜனுடைய அரண்மனை வாயிலில் ஒரு ஆணியடித்து மாட்டிவிட்டு ஓடினாள். இதையறிந்த துருபதன் அவளைத் தொடர்ந்து போய் "அம்மா! இந்த மாலையை எடுத்துக்கொள். எங்களுக்கு இந்தப் பெரும் பகையை யுண்டு பண்ணாதே" என்றான். அவள் "இதை நான் எடுக்க மாட்டேன். எவன் இந்த மாலையைக் கழுத்தில் போட்டுக்கொள்வானோ அவனால் வீடுமன் மாள்வான்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள். துருபதன் அந்த மாலையுள்ள பக்கத்திலும் கூட ஒருவரும் அணுகக் கூடாது என்று காவல் வைத்தான். நாள் செல்லச்செல்ல யாரும் போகமாட்டார்கள் என்று நம்பி, கவனிக்காமல் இருந்து விட்டான். (தொடரும்)



தென்முகக் கடவுள், திருவேங்காடு

# "புந்தியிற் புகுந்தான்"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்
தேவகோட்டை.

அருட் பெருங்கடலாக விளங்குகின்ற சிவபெருமான், ஆன்மாக்களே உய்யக் கொள்ளும் திருவுளக் குறிப்பினுல், தமது உச்ச நிலையில் இருந்து கீழிறங்கி வந்து அருவம், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளேத் தாங்கி, வெளிப்பட்டு வீற்றிருந்து நல்லருளே வழங்குவார். சமய தீக்கை பெற்று ஸ்ரீபஞ்சாக்ஷர செபம் முதலிய சிவபுண்ணியச் செயல்களேச் செய்பவர்களுக்கு உருவத் திருமேனியில் சிவபெருமானே வழிபடும் உரிமையுண்டு.

விசேட தீக்கை பெற்றுச் சிவபூசையாதியவற்ருல் சிவபுண்ணியங்களே ஈட்டுபவர்களுக்கு உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளில் வழிபாடும், நிருவாண தீக்ஷை பெற்றுச் சிவயோகமாகிய நற்றவங்களேப் புரிபவர்களுக்கு உருவம், அருவுருவம், அருவம் ஆகிய திருமேனிகளில் வழிபாடும் சிவயோக சாதனத்தால் மெய்ஞ்ஞானங் கைவரப் பெற்று மேல்நிலேயில் நிற்பவர்களுக்கு இம்மூவகைத் திருமேனிகளுடன் சொரூபத் திருமேனி வழிபாடும் உரியனவாகும்.

சரியைப் பத்தர், கிரியைச் சுத்தர், யோகசித்தர், ஞானமுத்தர் ஆகிய இந்நால்வருக்கும் சிவபெருமான் அவரவர் வழிபடும் திருமேனிகளில் முறையே விறகில் தீ, பாலில் நெய், பழத்தில் சாறு, எள்ளில் எண்ணெய் ஆகியவை போல மறைந்து நிற்றல், தோன்றியும் தோன்ருது நிற்றல், உய்த்துணரும்வழி விளங்கித் தோன்றி நிற்றல் ஆகிய முறைகளில் இருந்து அருள் புரிகின்ருரென்று ஞான நூல்கள் கூறுகின்றன. "இந்தனத்தின் எரி,பாலின் நெய், பழத்தின் இரதம், எள்ளின்கண் எண்ணெய்யும் போன்று எங்குமுளன் இறைவன்' என்பது சிவஞான சித்தியார். "விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்ற அப்பரடிகள் திருவாக்கும் இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிர தரம் ஆகிய நால்வகைப் பக்குவங்களேயுடைய உயிர்களுக்கு; அவ்வப்பக்குவங்களுக்கேற்பப் பலவேறு திருமேனிகளேத் தரித்துக் கொண்டு நின்று, இடையீடில்லாத பேரருளேப் புரிந்து வருகின்ற சிவபெருமான் உயிர்களின் அறிவுக்கறிவாகி, அவ்வுயிரறிவிற் புகுந்திருந்து தன்மையிலும்; நீலகண்டம் , மூன்று கண்கள், நான்கு தோள்கள் ஆதியவற்றுடன் காட்சி தந்து முன்னிலேயிலும்; ஆசாரியர் முதலியோரை அதிட்டித்து நின்று படர்க்கையிலும் கருணே செய்வது இயல்பு.

தன்மையில் நின்று அருள்புரியும் ஆண்டவன் உயிரறிவின் உள்ளே தங்கி உதவி செய்வதுடன் அவ்வுயிர் தங்குவதாகிய உடலின்கண், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞையாகிய ஆறு ஆதாரங்களேயும் இடங்களாகக் கொண்டு முறையே, கணபதி, பிரமா, திருமால், உருத்திரன், மகேசுவரன் சதாசிவம் ஆகிய மூர்த்தங்களாக எழுந்தருளியிருந்தும், உச்சிக்குமேல் துவாதசாந்தத் தானத்தை இடமாகக் கொண்டு பரசிவ மூர்த்தியாக எழுந்தருளியிருந்தும் அநுக்கிகரம் செய்தருள்வார். "மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களும்

தாமரைமலர் வடிவத்தையுடையன" என்பது, யோக நூற் பயிற்சியும், யோகாநுபவமும் உடையார் அறிந்த ஒன்று.

"அநாகதம் என்று சொல்லப் படுகின்ற நான்காவது ஆதாரகமலம் இதய தாமரை ஆகும். இந்த ஆதார கமலத்தில் உருத்திர மூர்த்தியாக இறைவன் எழுந்தருளி இருப்பார். இவரையே "மலர்மிசை ஏகினான்" என்று திருக்குறள் போற்றுகின்றது. இறைவன் இருக்கும் எல்லா ஆதாரங்களும் தாமரை வடிவினவேயாயினும், சிந்தித்துப் போற்றுதற்குரிய இடமான இதய கமலம், சிறப்பாகப் பேசப்பெறுகின்றது.

பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தராகிய சிவபெருமானை "மனத்தகத்தான்" என்றும் "கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும் தேன்" என்றும் தேவாரம் பாராட்டித் துதிக்கின்றது. இயங்குதிணையும் நிலைத்திணையுமாகக் காணப்பெறுகின்ற எல்லாப் பொருள்களிலும் அகமும் புறமுமாகி நிறைந்திருக்கும் ஆண்டவன், அனைத்துப் பொருள்களிலும் ஒருபடித்தாகத் தன்னை வெளிப்படுத்திக் காட்டுவதில்லை. "தாபர சங்கமங்கள் என்றிரண்டுருவில் நின்று மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்" என்பது சிவஞான சித்தியார் செய்யுள்.

எங்கும் நிறைந்துள்ள சிவபெருமான் வெளிப்பட்டு வந்து அருள்புரியும் இடங்களில் ஒன்று இதயகமல மாதலால் அதில் அவன் புகுந்திருப்பதை அடியார்கள் பெரிதும் நினைந்து போற்றுவார்கள். "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்" என்னும் அப்பரடிகள் திருவாக்கு இதனை வலியுறுத்தும். இறைவன் புந்தியிற் புகுந்து நின்று யாருக்கு அநுக்கிரகம் செய்வாரென்பதைத் திருமூலதேவநாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து இருபத்தேழாவது திருப்பாடலில் தெளிவு செய்துள்ளார். அத்திருப்பாட்டு,

> "சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்து
> அந்தமில் ஈசன் அருள்நமக் கேஎன்று
> நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
> புந்தியின் உள்ளே புகுந்துநின் றானே"

என்பதாகும்.

மலர்களில் சிறந்தது தாமரை மலர். "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பது சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கு. செந்தீ வண்ணராகிய சிவபெருமானது திருமுகம் செந்தாமரையை ஒத்த மலர்ச்சியும், மணமும், உடையது. அழியாத மலர்ச்சியும் மணமும் தாமரைக்குக் கிடையாது. ஆதியும் அந்தமுமன்றி எந்த நாளிலும் ஒரே படித்தான அருள் மலர்ச்சியும் கருணை மணமும் கொண்டு விளங்குபவர் சிவபெருமான். அவரது திருமுகம் இரவுடன் பகல் கூடுவதாகிய காலைச் சந்தியைப்போல், உயிர்களின் அஞ்ஞான இருளை நீக்கி, மெய்ஞ்ஞான ஒளியை வழங்குவதாகவும், அச்சந்தி வேளையில் மலரும் தாமரை மலரைப்போல மலர்ச்சியையும் மணத்தையும் உடையதாகவும், ஆதியந்தமில்லாது நிலைபெற்றதாகவும் இருக்கிறதென்பதை "சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்து அந்தமில் ஈசன் அருள்" என்ற பகுதியில் ஆசிரியர் உணரவைத்துள்ளார்.

சிவபெருமானது திருவருளை அடைவதில் உரிமையுடன் கூடிய ஒருமைப் பாட்டுணர்வு சைவ மக்களிற் பெரும்பாலோரிடத்துக் காணப் பெறாத ஒன்று. அங்ஙனமின்றி "அத்திருவருளைப் பெறுவதற்கு யானே உரிமையுடையேன்" என்னும் உறுதிப்பாடு எவரிடத்துக் காணப் பெறுகின்றதோ, அவரிடத்தில் மட்டுந்தான், அதனை வழங்குவதற்கெனச் சிவபெருமான் அவரது மனத்தாமரையிற் புகுந்து தங்கி அருளை வழங்குவார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை வைத்தாய்" என்று அருளிச் செய்து, இறைவன் மனம்புகுந்து தங்கியருளியதற்குத் தாம் புரிந்துள்ள சாதனை

யையும் உடன்வைத்து உணர்த்தியருளு வாராயினர்.

சிவபெருமானையும், அவரது திருவருளை யும், உயிர்களுக்கு உய்தி இல்லாமையை யும் உணர்ந்து, அப்பெருமான்பால் உண் மையன்பு செலுத்தி வணங்குபவர்களுக்கு அவரது திருவருள் எண்ணிய எண்ணி யாங்கு எய்துவித்து இன்புறுத்தும். அவ் வாறின்றி அவர்பாலும், அத்திருவருளின் பாலும் கருத்துவைக்காது, ஒதுங்கியிருக் கும் உயிர்களுக்கு அத்திருவருள், எல்லா உயிர்களுக்கும் ஒப்பச்செய்கின்ற பொது உதவியை யன்றிச் சிறப்புதவியை எந் நாளும் செய்யமாட்டாது. இதனை உணர்த் தவே "மெய்யர்க்கே மெய்யன் வினைக்கு வினையாயினன், பொய்யர்க்குப் பொய்யாய பொய்யாயினன்" என்று மெய்கண்ட நூல் கூறியருளியது.

"திருவருளுரிமையுடையோம்" என்னும் தெளிவுடன் நாள்தோறும் இறைவனை வணங்கும் எல்லோரது உள்ளங்களிலும், அவர் புகுந்திருந்து, அருளை வழங்குவா ரென்பதை, இத்திருப்பாடலின் பிற்பகுதி யால் நன்கு தெளிந்து அவ்வருளை முறையே அடைதற்கு ஆயத்தமாவது, அறிவுடையோரின் கடமையாகும்.



திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களின் மணிவிழா, சிதம்பரம் குன்றக்குடி மதுரை சென்னை மருதமலை சிரவணம்பட்டி முதலிய பல இடங்களில், பெருமக்கள் பற்பலர் கலந்துகொள்ள மிகவும் சிறப்புற நடைபெற்றது. தில்லைக்கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்தில், பொதுத் தீட்சிதர்கள் திருவாசக மணிக்கு வாழ்த்திதழ் ஒன்று வாசித்தளித்தனர். கூட்டத்தின் தலைவர் ஸ்ரீ சுவர்ண வேங்கடேச தீட்சிதர் அவர்கள், திருவாசகமணிக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்கள். (7—12—68)

—ஆசிரியர்.

# பக்தியின் தத்துவம்

மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

உலகில்காணும் மகான்களை நாம் இரண்டு வகுப்பில் சேர்த்துப் பேசுகின்றோம். சிலரை மகாஞானிகள், மகாபண்டிதர்கள் என்று வழங்குகிறோம். சிலரை மகாபக்தர்களென்று புகழ்கிறோம். பாண்டித்தியமும் பரமபக்தியும் ஒரே நபரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்க முடியாத தன்மைகளல்ல. இருளும் ஒளியும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டாதவையென்பது போல, இந்த ஞானபக்திகளும் ஒன்று சேர்ந்திருக்க மாட்டாதவையென்பதில்லை. நம்முடைய பூர்வாசாரியர்களும் மற்றும்பல பெரியார்களும், ஞான பக்தி விரக்தி நிதிகளாயிருந்தவர்களே. ஆனால் இக்காலத்தில் இவற்றை நாம் ஒரே இடத்தில்காண்பது அரிதேயாகின்றது. ஞானமுள்ள இடத்தில் பக்தியையும் அனுஷ்டானத்தையும் காணமுடிகிறதில்லை. இவை காணுமிடங்களில் ஞானத்தைக் காண்பது அரிதாகின்றது.

உலகில் ஞாதாக்களுக்குக் கௌரவம் அதிகமா? பக்திமான்களுக்குக் கௌரவம் அதிகமா? என்று நாம் பார்த்தால், உண்மையில் பக்திமான்களுக்குத்தான் கௌரவம் அதிகமாக இருக்கவேண்டும்; ஆனால் ஞாதாக்களுக்கே அதிகமான கௌரவம் ஆங்காங்கு செய்யக்காண்கிறோம். இதற்குக் காரணமென்னவென்றால், இவர்கள் போலிப் பக்தர்களா? உண்மைப் பக்தர்களா? என்று யதார்த்தமாகக்கண்டுபிடிக்க முடிகிறதில்லை. வித்வான்களென்ற வகுப்பிலும் உண்மை வித்வான்கள், போலி வித்வான்களென்கிற வேற்றுமையிருந்தாலும், வாயிலிருந்து வெளிவரும் பேச்சுக்களைக் கொண்டு இன்னார் உண்மைப்பண்டிதர், இன்னார் போலிப் பண்டிதர் என்று தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் பக்திமான்களை இங்ஙனே தெரிந்துகொள்வது, முடியாத காரியமாக இருக்கின்றது.

பக்தனென்று வெளிக்குக்காட்டிக் கொள்ளக்கூடிய வேஷ பூஷணங்களைத் தரித்துக் கொள்வது, அனைவர்க்கும் எளிதாகின்றது. உள்ளங்கனிந்த உண்மையான பக்தி பிறப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. பன்னிரண்டு திருமண்காப்புகளை அழகாயும் பிரகாசமாயும் தரித்துத் திருமணித் தாழ்வடம் திருப்பவித்திரம் முதலியன பூண்டு கொண்டு, பாகவதோத்தமனென்று உலகமடங்கலும் உகந்து கொள்ளும்படியான வேஷத்தோடு வெளிவருவதில் விசேஷ சிரமமில்லை. இது போலவே முடிமுதல் அடிவரையில் திருநீறு பூசி உருத்திராக்க மாலையணிந்து சிவபக்தசிகாமணியாக விளங்குவதிலும் தாமத மேற்படாது. ஆனால் மனத்தில் அழுந்திக்கிடக்கும் பாபவாஸனைகளை அகற்றிப் பரமேசுவரனிடத்தில் உண்மையான அன்பு கொண்டு தன்மய பவத்தை யடைவதொன்றே, கஷ்ட ஸாத்யமும் கால விளம்பத்தில் அருமையாய்ப் பெறக்கூடியதுமாம்.

பக்தியின் வெளிவேஷங்களை வகித்துக் கொள்வதனால் மாத்திரம், ஒருவன் உண்மையான பக்தனாக ஆகிவிடமாட்டான். அநாதிகால சஞ்சிதமான பாபங்கள் கழிந்து துர்வாஸனைகள் தொலைந்து பரமபுருஷ விஷயத்தில் பரவசமான பக்தி ஏற்பட்டுத் தன்மயமாய்ப் போனால்தான் பக்தனாக முடியுமெபனைத ஒவ்வொருவரும் மனத்தில் அழுத்தவேண்டும். பக்தியின் வெளிச்சின்னங்கள் அவசியமில்லையென்று நாம் சொல்லுகின்றிலோம். அவைமிகவும் அவசியமே என்பதைப்பெரிதும் வலியுறுத்துகின்றோம். ஆனால் வெளிச்சின்னங்களைத் தரித்துக்கொள்வதனால் மாத்திரம் திருப்தியடைந்து விடாமல், உண்மையான பக்திக்கு முயற்சி செய்ய வேண்டும்.

பெரும் பெருந் தருமகாரியங்களைச் செய்கிறவனே பக்தன் என்று சிலர் நினைக்கக்கூடும். கிணறு வெட்டுவிப்பது, சத்திரம் சாவடிகள் கட்டுவிப்பது, தண்ணீர்ப் பந்தல் வைப்பது இவைபோன்ற பல வெளிப்பகட்டான காரியங்கள் செய்கிறவன் பக்தன் எனச் சிலர் நினைக்கிறார்கள். உண்மையுரைக்குங்கால் இக்காரியங்கள் ஒரு விதத்திற் சிறந்தவைகளேயாகிலும் இவ்வகைக் காரியங்கள் செய்வதனாலேயே ஒருவன் பக்தனென்னும் வியபதேசத்திற்குப் பூர்ணபாத்திரமாய் விடமாட்டான். இவ்விதமான பெருங்காரியங்கள் செய்ய அனைவர்க்கும் இயலாது. யாரோ சிலர்தான் இவற்றைச் செய்யக்கூடும். அங்ஙனம் செய்பவர்களை விசேஷ தனிகர்களென்றும், விசாலமனம் படைத்தவர்களென்றும் சொல்லலாமே யல்லது, பக்தர்களென்று சொல்லுவதற்கில்லை.

ஆனால் உண்மையான பக்தனுடைய அடையாளமென்னவென்று கேள்வி பிறக்கலாம். உண்மையான பக்தனைக்காண்பது அரிதேயாகிலும் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. எம்பெருமானிடத்தில் சுயநன்மை கருதாத அன்புடைய பக்தனிடத்தில் ஒவ்வொரு ஸமயத்திலும் நாம் விசேஷத்தைக் காணலாம். எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் எந்த நிலைமையிலும் பக்தன் பக்தனாகவேயிருப்பான். நீராடுவது உண்பது முதலிய காரியங்களைச் செய்யும் போதும், பந்து மித்திரர்களோடு பழகும் போதும், பிணியால் வருந்தும் போதும், பலவகைக் கஷ்டநஷ்டங்கள் ஏற்படும் போதும், விசேஷமான லாபங்கள் கிடைக்கும் போதும், பக்தன் பக்தனாகவேயிருப்பான். எல்லாக் காலதேச நிலைமைகளிலும் சாதாரணமான நிலைமை மாறாமலே அவனிருப்பான். எவ்விதமான கொந்தளிப்பையும் அவனிடத்திற் காணமுடியாது. எப்பொழுதும் இயற்கையான சந்தோஷத்தோடு சாந்தமூர்த்தியாக இருப்பான். எவ்வித மாறுபாடும் அவனிடத்திற் காணமுடியாது மகத்தான ஆபத்துக்களிலும் தன்னிலைமையிலிருந்து பிறழமாட்டான். பொறுமையும் தயையும் சாந்தியும் பரிசுத்தியும் இன்னும் இதுபோன்ற பல நற்குணங்களும் அவ்விடத்திற் பதிந்து கிடக்கும். பக்தியின் நிலைமை முதிர முதிர இக்குணங்கள். வளர்ந்து கொண்டேவரும்.

எவன் தனது கடமையைக் குறையறச் செய்கிறானோ, மகத்தான ஆபத்துக்கள் மிடைந்தபோதும், அக்கடமைகளைச்செய்வதில் மயிரிழையும் பிசகுகிறானில்லையோ, தான் பிறர் சுற்றத்தார் மற்றையோர் மித்திரன் சத்துரு என்கிற பேதபாவனையின்றி அனைவரிடத்தும் ஒருபடியாக நடந்து கொள்ளுகிறானோ, உள்ளும் புறமுமொத்த சுத்தனாய் நேரான நெறியில் நிலைகிற்கிறானோ, எவன் எம்பெருமானிடத்தில் அகங்குழைந்த அன்புடையவனோ அவனே உண்மையான பக்தனாவான். பாலையும் நீரையும் பகுத்திடும் அன்னம்போல் அத்

தகைய பக்தர்களை அநாயாஸமாகக் கண்டறிவர் பெரியோர்.

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் மூன்றாவது அம்சத்தில் ஏழாமத்யாயத்தில், யமகிங்கர சம்வாதம், மகாபக்தர்களின் லக்ஷணத்தை யமன் தனது கிங்கரர்களுக்கு மிக விரிவாகக் கூறுவதாய் நிபந்திக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள பல சுலோகங்களுள் ஒரு சுலோகம் மாத்திரமே ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றது;

''ந சலதி நிஜவர்ண தர்மதோ யஸ்
ஸ்மமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே
ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிதுச்சைஸ்
ஸிதமநஸம் தமவேஸஹி விஷ்ணுபக்தம்''

என்பது கண்டபாடம் செய்யத்தக்க சுலோகரத்னம். இதன் பொருள்தான் மேலே விவரிக்கப்பட்டது.

---

## செய்திச் சுருக்கம்

சென்னைக்கு அணித்தேயுள்ள திருப்போரூர்க் கந்தசுவாமி தேவத்தானத்தில் நிகழ்ந்த பிரம்மோற்சவப் பெருவிழாவில், கிருத்திகைத் திருநாளில், ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள் அவர்களின் தலைமையில், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், M.A. M.O.L. அவர்கள், "திருப்போரூர்ச் சந்நிதி முறையும், சிதம்பர சுவாமிகளும்" என்னும் தலைப்பில் அரியதோர் ஆராய்ச்சி விரிவுரை ஆற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள், தக்க முன்னுரையும் முடிவுரையும் செவ்விதிற் புரிந்து, சிறப்பித்தருளினார்கள். *(23—2—69).*

---

## செய்திச் சுருக்கம்

**திருக்குடமுழுக்குவிழா :**

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டைக்கு அருகே உள்ளதும், கோவிலூர் என வழங்கப்படுவதும், திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல் பெற்றதுமான திருஉசாத்தானம் என்னும் தலத்தில், பெரியநாயகி உடனுறை மந்திரபுரீசுவரர் கோயிலில் திருக்குடமுழுக்கு விழா, சித்திரை மாதம் 12-ஆம் தேதி (24—4—69) அன்று, மிகவும் சிறப்புற நடைபெறும். இராமபிரான், ஆதிசேடன், வருணன், மார்க்கண்டேயர், விசுவாமித்திரர், தேவேந்திரன் முதலிய பலர் வழிபட்டு அருள்பெற்ற, இத்தலத்தின் குடமுழுக்கு விழாவிற் கலந்து கொண்டு, அன்பர்கள் அனைவரும் நலம் பெறுவார்களாக !

—ஆசிரியர்.

---

## ஆணையர் அலுவலகக் குறிப்பீடுகள்

ந. க. எண் 49560/68/அ2/ நாள் 31—1—69

இந்து சமய அறநிலையச் சட்டம் 33ஆவது பிரிவின்கீழ்த் தமக்கு அளிக்கப்பெற்றுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அறநிலைய ஆணையர் அவர்கள், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் செயலாளரை, அவர் தம்முடைய பணிகளின் தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்களில் கோயில்களுக்குச் சென்று பார்வையிட்டு, அவைகள் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளனவா, பூசைகள் முறைப்படி நிகழ்கின்றனவா, என்று ஆராய்ந்து அறிக்கை தரும்படி நியமிக்கின்றார்.

(ஒப்பம்) ஆ. இராதாகிருஷ்ணன்
*அறநிலைய ஆணையர்*

# விழுமிய விமானம்

திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், திருவதிகை.

தமிழ்நாடு திருக்கோயில்களால் உலகெலாம் போற்றும் சீரிய பெருமை வாய்ந்தது. அக்கோயில்கள் பலதிறத்தன. தோற்றுங் கோயில், தோன்றுங்கோயில், வேற்றுக் கோயில், இளங்கோயில் எனப் பகுத்துரைப்பர் அப்பரடிகள்.

தோற்றுங் கோயிலுந் தோன்றுங் கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்தகுளிர் புன்சடை யரற்கு
ஏற்றங் கோயில் கண்டீர் இளங்கோயிலே.

எனவரும் அவரது திருக்குறுந்தொகை அப்பகுப்பினையுணர்த்தும். தோற்றுங்கோயில் என்பது தேவர், தானவர், முனிவர் அரசர்களால் ஆக்கப்பட்ட கோயில்கள். தோன்றுங்கோயில் பிறரால் தோற்றுவிக்கப்படாதுதானே தோன்றிச் சுயம்பூமூர்த்தியாக விளங்கி நிற்குந் திருக்கோயில். வேற்றுக் கோயில் என்பது மேற்குறித்த வகைகளுள் பொருந்தாதனவாய கோயில்கள். இவ்வகையினைச் சிவாலயங்களல்லாதனவாகிய கோயில்கள் என்றுங் கூறுவர். சமாதிக் கோயில்கள் இதனுள் அடங்குவன. இளங்கோயில் என்பதனைப் பால ஆலயம் என்றுரைப்பர். மூலமூர்த்தியின் அருளாற்றல் பல்வேறு குருமூர்த்தியின்பால் மந்திரபூர்வமாகப் பொருந்தி வழிபாட்டிற்கு அமைந்த கோயிலே இளங்கோயிலாகும்.

இனி, கோயில் என்பது அரசர்க்கரசனாகிய இறைவனது உறைவிடமாகும். இறைவன் யாண்டும் இடையீடின்றி நிற்பவனாயினும் தயிரினெய்போல விளக்கமாகவுள்ள இடமே கோயில் என்பது முந்தையோர் கண்ட அநுபவம். கோயில் என்பதனை விமானம் எனவுங் கூறுவர். இக்கட்டுரையின் தலைப்பு விழுமிய விமானம் எனவுள்ளது. அதன்பொருள் மேன்மையான அல்லது சீரிய கோயில் என்பதாம். எனவே கோயில்களுள் சீரியது யாது என்ற ஆராய்ச்சி இன்றியமையாததாகும். திருநாவுக்கரசுதேவர், "தொண்டர், அகமலாற்கோயிலில்லை" எனவும், மணிவாசகனார், "சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்" எனவும் போற்றுகின்றனர். இவை அவர்தம் அநுபவத்தாற் கண்ட உண்மைகள். இதனால் இறைவன் மிகுதியும் விரும்புவது அகக்கோயில் என்பது புலனாம். திருமூலர் திருக்கோயில்களைப் "படமாடக் கோயில்" எனவும், அடியார் தம்மை "நடமாடக் கோயில்" எனவும் உணர்த்தி, நடமாடக் கோயிலே படமாடக் கோயிலிலும் சிறப்புடைத்தென அறிவிக்கின்றனர்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே.

எனவரும் திருமந்திரக் கருத்தையுணர்தற்பாலதாம். நடமாடக் கோயில் என்று அடியார் தம்மைக் குறிப்பதேன்? அவர்கள் உள்ளத்தை இறைவன் தன் கோயிலாகக் கொண்டமையே காரணமாகும். "அடியார் உள்ளத்து அன்பு மீதூரக் குடியாக்கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்" என்ற மணி வாசகம் அதனை வலியுறுத்துகின்றது. காடவர் கோமான் எடுத்த கச்சிக் கற்றளியினும், நின்றவூர்ப்

பூசலார் இருநிதியின்மையான் மனத்தினுல் முயன்று அமைத்த சிந்தையாலயத்தைச் சிவபெருமான் உவந்த வரலாறு இறைவனது திருவுள்ளக் குறிப்பை விளக்கும்.

இனி உள்ளமாவது உடலில் அமைந்த தோர் உறுப்பாம். இதுகாரணமாகவே உள்ளக்கோயிலே உடற்கோயிலாகவும் உணர்த்துவர். உடல் இறைவன் உறைவிடமாக மாறிய நிலையைக் கருவூர்த் தேவர் உணர்த்துவதனை யுணர்வாம்.

புனல்பட வுருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்த வேதகத்தென்
மனநெக மகிழ்ந்த பேரொளியே!
முனைபடு மதில் மூன்றெரித்த நாயகனே !
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்து நின்றமையால்
விழுமிய விமானம் ஆயினதே.

என்பது அவர்தம் திருவிசைப்பா. இது முகத்தலை என்னும் அரும்பதியில் அருளியது. ஈண்டுத் தேவர் இறைவனைப் பேரொளியே எனவும், நாயகனே எனவும் விளித்து முன்னிலைப்படுத்தி, இறைவன் தன்னுடலகத்தே நின்று விளங்கியமையால் அவ்வுடல் அவனது சிறப்புடைய கோயிலாக மாறிய நிலையை அறிவுறுத்துகின்றனர். உடல்கள் உயிர்களின் முன்னை வினைப் பயன் காரணமாகப் பிறப்பன. வினைப்பயனின்றி உடல்கள் தோன்றுவன அல்ல. இறைவன் வினையற்றவன். வினைப் பயனுல் வரும் உடலுள் வினையின்றிய இறைவன் விளக்கமாக இருத்தலால் உடல் சீரிய கோயிலாக அமைந்ததனைப் போற்றுகின்றனர்.

உடல், என்பு முதலிய எழுவகைத் தாதுப் பொருள்களின் கூட்டமாகத் திகழ்வது. அஃது எங்ஙனம் கோயிலாக மாறவியலும் என்பது ஆய்வுக்குரியதாகும். என்பு முதலிய பொருள்களின் கூட்டம் உடலாக அமைந்ததெனினும் அவை யாவும் அறிவற்றனவாகிய சடப் பொருள்களே. அவைகளைப் பற்றி நின்று விளங்குவதே உயிரின் தன்மையாகும். உடல் பற்றுக் கோடாக உயிருக்கு அமையவில்லையாயின் உயிர் காணற்பாலதன்று. அவ்வுயிர் அறிவுவடிவாயது. அவ்வறிவு சிறுமையுடையதாய் விளங்குவதுயாவரும் அறிந்ததே. அச்சிற்றறிவு நீங்கித் தெளிவு பெற்று ஆனந்தானுபவம் எனும் பேரின்ப நிலை தோன்றுகின்றபோது உடல் இறைவனுக்கு உறைவிடமான கோயிலாக விளங்குவதாகும். இவ்வருள் நிலையை உயிர்கள் தாமே முயற்சியால் பெறக் கூடாததாய் இறையருளால் அடையக் கூடுதலால் அதனை மேற்குறித்த திருப் பாட்டினுள் "நீ புகுந்து நின்றமையால்" என்றது விளக்கியதாகும்.

இனி, உயிரின் உணர்வு குறைஞானத்தால் மாறுதலடைந்து இறைவனுக்கு இருப்பிடமாதல் ஒரு தலை. உயிரினுணர்வு இறைவுணர்வைப்பற்றும் இயல்புடைமை தெளிவு படுத்தப்படுகின்றது. இயல்பாக உயிர்கள் தத்தம் மெய்வாய் கண் மூக்குச் செவியெனும் ஐம்பொறிகளால், சுவையொளி ஊறு ஓசைநாற்றம் ஆகிய ஐம் புலன்களை நுகரும் பான்மையன. இக் கருவிகளாய காரணங்கள் யாவும் மாயையெனும் மலத்தின் காரியமாய் விளங்குவன. எனவே உயிர்கட்கு அவைகளால் வருமுணர்ச்சி மாயைபற்றிய மயக்கவுணர்ச்சியே யாகும். அதனை இருள் பற்றிய தென்ப. இருள் அஞ்ஞானம் அல்லது அறியாமையாம். அவ்விருளையகற்றுவது ஒளிஅல்லது சிவஞானம் ஆகும். எனவே இறைவனைப் பேரொளியே என விளித்தார். இங்கு உலகின் புறவிருளைப் போக்கும் சூரியனைப் போன்று உயிர்கள் பாலுள்ள அலகில் அகவிருளைப் போக்கும் சிவஞானமானமையால் இறைவன் பேரொளியாக உருவகிக்கப்பட்டான். அவ்வொளியான இறைவன், அன்பகத்தில்லாக் கல்லாம் மனத்தே நில்லானுதலினுல், அக் கல்லை யொத்த மனத்தைப் பிசைந்து கனிவிக்க அஃது அன்பினுல் நெகிழ்ச்சியடைதலைக் கண்டு மகிழ்பவனுவன் என்பார், 'மனநெக மகிழ்ந்த' என்றருளினுர். கல்மனம் கசிந்த மனமாகிய தன்மை பூரணமான மாற்ற மென் றறிவிக்க நிறைந்த 'வேதகம்' என்றுர். வேதகம் வேறு படுத்துகின்ற மாற்றம். இம்மாற்றம் ஓர் உவமையான் விளக்கப்படுகின்றது.

ஒரு குயவனார்மண்புனைவினையில்தேர்ச்சி பெற்றவர். அவர்தம் கைவினையை மக்கள் போற்றினர். அவர் மண்ணைப் பிசைந்து ஒரு நீர்ச்சால் அமைத்தார். அதனை மேற்குறித்த திருப்பாட்டில் 'வினைபடுநிறை' எனப்பட்டது. நிறைநீர்ச்சாலாகிய அதனைக் காற்றினில் உலரவைத்தனர். அவர் அறியாத வகை திடீரென்று வானம் இருண்டு மழை பெய்தது. அம்மழை பச்சைமண்ணாக விருந்த நீர்ச்சாலின் மேல் தன் துளிகளைச் சிந்தியது. அச்சால் கரைந்து பாழாயிற்று. பயன் பெறுதற்கு ஏதுவில்லை. மீண்டும் ஒரு நீர்ச்சாலினைச் செய்து தக்க இடத்தினில் காற்றினிலாற்றிச் சூளையிட்டு வைக்க அதுதீயினில் வெந்து உறுதி பெற்றது. பின்பு அந்நீர்ச்சாலினில் பகையாகும் நீரினைப் பெய்து தேக்கிப் பிறருக்கு அந்நீரினைக் கொடுத்துத் தாக வருத்தத்தைய போக்குஞ் செயல் உலகில் யாவரும் அறிந்ததே. நீர்ச்சால் மழையால் அழிதலையும் தீயினால் உறுதியடைதலையும், பகைப் பொருளைப் பயன் படுத்துதலையும், பிறர் வருத்தம் போக்குதலையும் கண்ட கருவூர்த்தேவர் உயிர்கள் நிலையில் அதனை உவமையாக்கியுணர்த்துகின்றனர். பச்சை மண்ணாக உருவு கொண்டிருந்த நீர்ச்சால் புனல் தன்மேல் வீழ்தலும் அதனாற்றலுக்கு அடங்கியழிவதனை, உயிர்கள் அறிவுடையனவாயினும் மாயையால் மயங்கித் தன்நிலை கெடுதலுக்கு ஒப்பிட்டனர். அங்கனம் மயலினாற் கட்டுண்டவுயிர்கள் சிவஞானக்கினியால் தாக்கப்பட்டுச் சிவமாய் நின்றவழி சிவத்தைவிட்டு நீங்கா உறுதி நிலையைத் தீயினிலிட்டுச் சுட்டபின்நின்ற செம்மை நிறம் வாய்ந்த நீர்ச்சாலினுக்கு உவமித்தார். இவ்வாறு சிவமாய் நின்ற உயிர்கள் மாயா காரியமாகிய தநுகரணபுவன போகங்களில் அழுந்திநிற்பினும் அவைகளால் பாதிக்கப் படாது அவைகளோடு பொருந்தி நிற்கும் திறத்தைப் 'பைம்புனல் பொசிந்து' என்றதனால் விளக்கியருளினர். உயிர்களைப் பிணித்து நிற்கும் மும்மலங்களுள் கன்மமும் மாயையும் ஆகந்துக மலங்கள் எனச் சித்தாந்த சாத்திரங்கள் குறிப்பன. ஆகந்துக மலங்கள் இறைவனது உடைமைப் பொருள்களாய் உயிர்களின் சகச மலமெனப்படும் ஆணவமலத்தின் ஆற்றலை யடக்கும் மருந்து போன்று உயிர்களிடத்து இடையே கூட்டப்பெறுவன. "சிரக்கண் வாய் செவி மூக்குயர் காயமாகித் தீவினை தீர்த்தவெம்மானை" எனச் சுந்தரரும், "தோற்றநிலையிறுதிப் பொருளாய் வந்த மருத்துவன்" எனத் திருநாவுக்கரசரும் குறித்தவாற்றான் மாயேயப் பொருள்கள் உயிர்களின் மருளை நீக்கும் மருந்தாய்ப் பயன்படுவன என்பது உணரத்தக்கதாம். மாயேயப் பொருள்கள் பகைப் பொருளாய் மயக்கத்தைச் செய்வனவாயினும் சிவ ஞானம் பெற்றஞான்றே அவையுயிர்கள் தமக்குத் துணையாகுந்திறத்தன. வாசனைமலம் முனைத்தெழுமாயின் உயிர் அதனை யடக்கிச் சிவத்தையே சார்ந்து நிற்கும். "ஊனையுயிர் வெருட்டியொள்ளியானை நினைந்திருந்தேன்" எனும் சுந்தரர் திருவாக்கு அதனை வலியுறுத்துகின்றது. சிவாநுபவத்திற்றலைப்பட்டு நின்றவர் பிறவுயிர்களின் வருத்தங்களை நோக்கினவராய் அவர்தம் பிறவித் துன்பங்களை நீக்கித்தாங்கள் பெற்ற பேரின்பம் அவர்களும் பெறத் தொண்டினை மேற்கொண்டெழுகுவர். இதனை விளக்கவே சுட்டெடுத்த நீர்ச்சால் நன்னீரேந்தி நின்று பிறருக்குக் கொடுத்து உதவுதலை உவமித்தருளினர்.

இனி உயிர்கள் பசுகரணங்களாகிய மாயேயங்களைச் சிவகரணங்களாக மாற்றும் நிலைமையைக் கருதுவாம். திருவாதவூரர் சிவானந்தாநுபவம் பெறவிழைவார் தனது திருப்பள்ளியெழுச்சியினில்,

> அதுபழச் சுவையென அமுதென அறிதற்
> கரிதென வெளிதென அமரருமறியார்
> இதுவவன் திருவுரு விவனவ னெனவே
> எங்களையாண்டு கொண்டிங்
> கெழுந்தருளும்·

என வேண்டுகின்றனர். சிவானந்தாநுபவம் பெறத் தகுதியைத் தந்து தன்னையாட் கொள்ளுமாறு அவர் விண்ணப்பம் உள்ளது. தகுதியாவது உயிர் சிவமாக விளங்கி நிற்றற்கு உயிர்குடி கொண்டிருக்கும் உடல் சிவன்திருமேனியாக மாறுதலுமாம். இது உடலையும், அவன் சிவனையும், திருவுரு சிவத்தின்திருமேனியையும் குறிப்பன. "ஆன்மாப் பசுவென்னும் பெயர்

நீங்கிமுத்தனுய் அருளோடுங் கூடி நின்ற வழி அவ்வான்மாவின் வியாப்பியமான மாயை முதலியனவுந் திரோதான சத்தி போலப் பாசமென்னும் பெயர் நீங்கி அருளேயாய் நிற்கும்'' எனவரும் சிவஞான மாபாடியம் கருதத்தக்கது. மாயேயமாகிய உடல் கரணங்களெல்லாம் சிவதநுவாக வும் சிவகரணங்களாகவும் மாறுதல் அருளோடுங்கூடி நின்ற உயிர்களுக்கியல் பாகும். ''கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணமெல்லாம் நீ'' எனும் மணிவாசகமும் ''நாக்குஞ் செவியுங் கண்ணும் நீயென் பன், நான் அலனே, இனி நானுனை நன்கு ணர்ந்தேன்'' எனும் சுந்தரர் திருப்பாட்டும் அதனை வலியுறுத்துகின்றன. இங்ஙனம் அங்கங்களாகிய கரணங்கள் சிவகரணங்களாக மாறியவெனின் அவையுடைய அங்கியாகிய உடலும் சிவதநுவாக மாறியதாகும். உடல் சிவன்றிரு மேனியாதலும் உண்ணின்ற உயிரும் அருளோடுங் கூடிச் சிவமாய் நின்றதாகும். இங்ஙிலேயே மனமுருகிப் பாசப்பற்றற்று இறைவன் திருக்கோயில் கொள்ளுவதற்குச் சிறப்பிடமாம்.

இனி பாசப்பற்றறுத்தல் என்பது முப்புர மெரித்த வரலாற்றின் உண்மைக் கருத்து. முப்புர மெரித்தமையை மும்மலகாரியம் என்பர் திருமூலர். மும்மலங்களைச் சுட்டெரித்தார் என்று விளக்கங்கூறுவார் நுண்ணறிவுடைய விழுமியோர். மும்மலங்களற்றவரே வீடுபெறுவர். அவ்வீட்டினை யருளுபவன் இறைவனாகிய தலைவன் கருவூர்த்தேவர் மேற்குறித்த திருவிசைப் பாவில் அத்தலைவனை நாயகன் என்று மொழிந்தார். பதிஞானத்தாலுணரப்படும் பரமனைப் பேரொளியாயும் மலங்களை அடக்கியருளுந்தலைவனை நாயகனுயும் விளித்தமை இறைவனது பாச நீக்கம் சிவப்பேறு எனும் இரு அருட்செயல்களை நினைவூட்டு கின்றது. அத்தகையவனை உடலிடங் காண்டல் உயிர்களது கடமையாம். திருமூலரும்,

> உடம்பினை முன்னம்
> இழுக்கென் றிருந்தேன்
> உடம்பினுக் குள்ளே
> உறுபொருள் கண்டேன்
> உடம்புளே உத்தமன்
> கோயில் கொண்டான் என்று
> உடம்பினை யான் இருந்து
> ஓம்புகின் றேனே

எனவரும் திருமந்திரத்துள் உடம்பின் பேருதவியை விளக்கியுள்ளனர். உடம்பினுள் உத்தமனைக் கண்டுணர்ந்தார் கருவூர்த்தேவர். அதனால் தன்னுடம்பு இறைவற்குச் சீரிய கோயிலாயிற்றென்று மகிழ்ந்து திருமுகத்தலையில் அமர்ந்த சிவபெருமானைப் போற்றுகின்றனர். தேகத்தைத் தேவாலயமாக மாற்றுக என்பது ஆணை போலும்.

## (இறையுணர்வு)

கடற்காட்சி, வான்காட்சி, கார்வரைசூழ் காட்சி,
உடற்காட்சி, அவ்வுடல் ஒண்சூல்—படற்காட்சி,
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓர்இறைவன் உண்டுஎன்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்.

—மொழிநூல் ஆசிரியர்,

**மாகறல் திரு. கார்த்திகேய முதலியார்.**

# மதிப்புரை

திருவருணை முருகன் பிள்ளைத் தமிழ்: இந்நூல், தருமை ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி—மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களால், இயற்றப் பெற்றது. ஆசிரியர் அவர்கள் திருவண்ணுமலைக் கார்த்திகைத் தீப விழாவினை, 'இடரினும் தளரினும்' விடாமல் தொடர்ந்து, எத்தனையோ பல ஆண்டுகளாகத் தரிசித்து மகிழ்ந்து வருபவர்கள். ஆண்டுதோறும் திருவண்ணுமலைப் பெருமானுக்குத் தமது புலமைக் காணிக்கையாக ஏதேனும் ஓர் இனிய நூல் இயற்றிப் படைக்கும் நல்ல பழக்கமும் பண்பும் உடையவர்கள். அம்முறையில்,இக் கீலக (1968) ஆண்டுக் கார்த்திகை விழாவில் இயற்றப்பெற்றதே, இச் சிறந்த இனிய நறுநூல் !

பிள்ளைத் தமிழ் இயற்றுவது என்பது, எளியதொரு செயல் அன்று. இலக்கண இலக்கியத் தேர்ச்சியும். பன்னூல்களிற் பரந்த பயிற்சியும், இயல்பாக அமைந்த கவிதை யுணர்ச்சியும், சிறந்து முதிர்ந்த கற்பனைத் திறனும், மரபுநெறி பிறழாத பெரும்புலமை மாட்சியும் உடையவர்கட்கே, அஃது இயலும்.

இந்த நூலின் ஆசிரியர், குமரகுருபரர் சிவஞானமுனிவர் போன்ற செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர்களின் நூல்களிற் பெரிதும் திளைத்தவராதலின், அவர்களின் நெறிமுறையும் சொற்பொருட் சுவைநலங்களும், கற்பனை வளங்களும் அமையும் வண்ணம், மிகச் சிறந்த முறையில் இந்நூலை இயற்றி யளித்திருக்கின்றார்கள். இந்நூலின் சிறப்பைப் பல்காற் படித்துணர்தல் வேண்டுமே யன்றி, இதன் சுவையினை 'ஈதுகாண் என்று தந்து காட்டலாகாது'. எனினும், ஒரு சில நயஞ்செறிந்த பகுதிகளை மட்டுமாதல், ஈண்டுச் சுட்டிக் காட்டுதல் அமைவுடைத்து. கீழே எண்ணிட்டுச் சுட்டிக் காட்டியுள்ள பாடல்களின் பகுதிகள், ஆசிரியரது கற்பனைத் திறனைச் சுவைமிக விளக்குவனவாகும்.

அண்ணுமலைப்பிரான் புதல்வன், உமையின் உரிமை (1), திருமால் குன்றெடுத்த செயல், விண்மகளிர் என மண்மகளிர் விளங்கல் (2), மகளிர் ஊசல் (3) கலைமகள் திருமகள் மயக்கம் (4), புனித மாதவர் வாழ்வு (7), பொழில்வளம் (11), முருகன் அழுகை தீர்தல் (13), திருவருணையின் சிறப்பு (14), இறைவன் மணி-முருகன் ஒளி (15), பெண்ணை நன்னுடு (19), திருவருணையில் அருவி-மேகம்-கோபுரம் (22-25), முதற் கடவுள் இயல்பு (27), முனைப்பாடி நாடு (37), சம்பந்தர்-குமரகுருபரர் (46), மெய்கண்ட தெய்வம் (58), முருகனும் சந்திரனும் (63-66), நக்கீரர்-அருணகிரியார் (69), ஔவையார் (80), முருகன் வரத்தக்கவன் (81), சிவபிரானின் தமருகமும் முருகனின் சிறுபறையும் (82), சிவபிரானின் நடத்திற்குப் பிறர் முழக்கம் பொருந்தாமை (83), திருமணமும் விருந்தும் (86), முருகனின் பறைக்கு நிகர் (87), பிற ஒலிவகை (89), வைதிகத்தேரும் வளனுற்றது இல்லை (92), தாய்ப்பேயும் குட்டிப் பேயும் (93), தம்பியின்பால் விநாயகரின் பரிவு (94), முத்திநாடு ஆள்வோர் (98) என்பன பற்றிய கற்பனைகள், ஆசிரியரின் நுண்மாண் நுழை புலனுக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

புலமைநலன் பக்திநலன் கவிதைநலன் என்பன பலவும் ஒருங்கமைந்து, இந்நூல் பெரிதும் சிறந்து விளங்குகின்றது. சைவசித்தாந்த தத்துவநூற் பெரும்புலவரும், சான்றோரும் ஆகிய இந்நூலாசிரியரின் புலமையும் தொண்டும், பெரிதும் போற்றிப் பாராட்டற்பாலன. கிடைக்கும் இடம் :—மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், தருமபுர ஆதீனம், மாயூரம். விலை ரூபா ஒன்று.

—ஆசிரியர்.

# வெந்தயத்தின் மேன்மை

திரு. இராமகிருஷ்ணன் அவர்கள்,
சித்த மருத்துவர், இலவசச் சித்த மருத்துவ சாலை, வேலூர்த் தேவத்தானம்.

வெந்தயம் ஒரு சிறந்த மூலிகை. வெந்தயத்திலும், வெந்தயக் கீரையிலும், காட்லிவர் ஆயில் என்னும் மீன் எண்ணெயிலுள்ள 'ஆல் காமிட்' என்னும் சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. மூளைத்தசையைப் பலப்படுத்தி ஞாபக சக்தியை வளர்க்கக்கூடிய 'பாஸ்பரஸ்' 'நைட்ரஜன்' சத்துக்களும் நிறைந்திருக்கின்றன. தசையை வளர்க்கக்கூடிய 'லெசிதின்' முட்டையிலுள்ள 'நூக்ளியோ' 'ஆல்பூமன்' ஆகிய சத்துக்கள் நிறையக் காணப்படுகின்றன. இரத்தம் உண்டாவதற்கும் இரத்த அணுக்களை அதிகமாக்கிச் சிவப்பாக்குதற்கும் பயன்படுகின்ற இரும்புச் சத்து வெந்தயத்திலும், வெந்தயக்கீரையிலும் அதிகம் காணப்படுகின்றது. வெந்தயத்தை இரசாயனச் சோதனை செய்ததில் 6% கசப்பு எண்ணெயும், 28% பியூசிலாஜ் பிசின் போன்ற பொருளும், 23% ஆல்பூமனும், 33% மற்ற வைட்டமின் சத்துக்களும் இருப்பதாகத் தெரிகிறது. 100 பலம் வெந்தயத்தை எரித்து அதன் சாம்பலைச் சோதனை செய்ததில் உடலை வளர்க்கும் பாஸ்பரஸ் ¼ பங்கும், எலும்பை வளர்க்கக் கூடிய கால்சியம் என்னும் சுண்ணும்புச் சத்து ¾ பங்கும் இருப்பதாகத் தெரிகிறது.

வெந்தயக் கீரையால் வயிற்று உப்பிசம், அக்கினி மந்தம், வாத சோபம், சிலேத்தும தோடம், காசம், அரோசகம், தீராத இருமல், ருசியின்மை ஆகிய பிணிகள் நீங்கும்.

வெந்தயம் குழந்தைகளுக்குக் காணப்படும் வயிற்றுக் கட்டிகளையும் மகோதரக் கட்டிகளையும் கரைக்கும். உடல் வீக்கம் சீதபேதி, விடா இருமல், வயிற்றுவலி முதலியவைகளுக்கு மிகவும் கைகண்ட மருந்து. தீபன சக்தியை உண்டாக்கி உணவைச் செறிக்கச் செய்வதுமல்லாமல் மூளை நரம்புகளையும் பலப்படுத்துகிறது. மூத்திர அடைப்பை நீக்குகிறது.

வெந்தயம், கோதுமை ஆகியவற்றை வகைக்கு ½ அவுன்சு இளம் வறுப்பாய் வறுத்து இரவில் பசும்பாலில் ஊறவைத்துக் காலையில் அதைக் கடைந்து வடித்து நெய், தேன், சர்க்கரை வகைக்கு ½ அவுன்சு சேர்த்துத் தினம் காலையில் சாப்பிட்டுவர இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் நன்கு விருத்தியாகும். விந்து ஊறும். மூத்திரக் குண்டிக்காய்கள் நன்கு பலமடைந்து நீரிழிவு, மதுமேகம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும்.

வெந்தயத்தை அரைத்து ஆரோரூட் மாவுடன் கஞ்சி செய்து சாப்பிட்டால் வயிற்றுப் போக்கையும் சீதபேதியையும் நிறுத்தும். பசுமோரிலும் கலந்து சாப்பிடலாம். குழந்தைகளுக்கு அடிக்கடி காணுகின்ற தோஷக் கழிச்சல் ஜலக்கழிச்சல் முதலியவைகளுக்கும் மேற்கண்டவாறு கொடுத்தால் உடனே பேதியை நிறுத்தும்.

வயிற்றிலும் கருப்பப்பையிலும் அதிக வெப்பத்தால் ஏற்படும் புண்களுக்கும் வெந்தயத்தை அரிசிக் கஞ்சியுடன் சாப்பிடலாம். மேலும் பெண்களுக்கு ஏற்படும் 'லுக்கோரியா' என்னும் வெள்ளை விழுதலைக் குணமாக்கும். தாய்ப்பாலை அதிகரிக்

கச்செய்யும். அதனுல் தான் 'நொந்த புண்ணேயும் ஆற்றிடும் வெந்தயம்' என்னும் பழமொழி கிராமங்களில் இன்றும் வழங்குதலேக் காணலாம்.

வெந்தயமானது கணேச்சூடு, அத்தி சுரம், பிரமேகம், க்ஷயம், சீதக்கழிச்சல் அதிசாரம், தொல்லேதரும் இருமல் முதலியவற்றை நீக்கும். தேகத்திற்கு வலுவை உண்டாக்கும். சுக்கிலத்தைக் கெட்டிப் படுத்தும்.

பிரஞ்சு டாக்டர் 'ப்ளூம்' என்பவர், தம் ஆராய்ச்சியில் கண்டவற்றைப் பின்வருமாறு எழுதியுள்ளார். அதாவது "காட்லிவர்" எண்ணேக்குப் பதிலாக வெந்தயக் கீரையைத் தினம் உண்டு வந்தால், மேகத்தால் ஏற்படக்கூடிய கால் மரமரப்பை (நுரைட்டீஸ்) போக்கும். யானேக்கால் மேகநோய்களேயும், இரத்தம் குறைந்து காணப்படும் பாண்டு ரோகத்தையும்,மூளே நரம்புகளின் பலவீனத்தையும் போக்க, வெந்தயத்தைத் தூள் செய்து கஞ்சியுடன் அல்லது பாலுடன் காற்பலம் கலந்து தினமும் உண்டு வந்தால், குணம் காணலாம் என அவர் குறிப்பிட்டிருப்பது வாசகர்கள் கவனத்திற்குரியது.

வெந்தயத்தை அரைத்துத் தேய்த்துத் தலே முழுகி வந்தால் தலேமுடி உதிர்தலேப் போக்கலாம். கூந்தல் கறுப்பாகவும் பளபளப்பாகவும் நன்ருக வளரும்.

பூஞ்சாந்துப் பட்டை, கல்பாசி, கார்போக அரிசி, ரோசா மொட்டு, மகிழம்பூ, மருவு, கஸ்தூரி மஞ்சள், சுருள் பட்டை வகைக்கு $\frac{1}{4}$ பலம், வெந்தயம் 1 பலம், ஒன்றிரண்டாக இடித்து 4 சேர் தேங்காய் எண்ணேயில் கலந்து ஒருவாரம் சூரிய வெப்பத்தில் வைத்துப் பார்த்தால் அழகான இரத்தச் சிவப்பான வாசனேத் தைலமாகும். அதைத்தலேக்குத் தடவித்தலேசீவிவந்தால் கூந்தல் கறுகறு என்று வளர்ந்துவிடும். மயிர்கள் உதிர்தலே நீக்கும். இதுவே "பரிமளக் கூந்தல் தைலம்" எனப்படும். வாசனே தாஞகவே வந்துவிடும்.

வெந்தயத்தை மாவாக்கி வாசனேத் தூளுடன் கலந்து முகத்தில் பூசிவந்தால் முகப் பருக்கள் மறைந்து தோல் வழவழப்பாகி மிக்க ஒளியுடன் விளங்கும். வெந்தயத்தை நீரில் ஊறவைத்துத் தினமும், காலேயில் நீராகாரத்துடன் உட்கொண்டு வந்தால் தேககாங்கை நீங்கி உடல் பருக்கும்.

தீராத கிராணிக்கும், வெந்தய லேகியத்தைத்தவிர உறுதுணே செய்யக்கூடிய வேறுமருந்து நிச்சயம் இல்லே என்றே கூறலாம். 100 பலம் வெந்தயத்தை 8 படி நீரில் இடித்துப் போட்டு 1 படியாகச் சுண்ட வைத்து வடித்து அதில் 10 பலம் சர்க்கரையைச் சேர்த்துப் பாகு பதத்தில் அதிமதுரம், கோஷ்டம், சீரகம், கசகசா அதிவிடயம், ஓமம், வகைக்கு 1 பலமும் அபின் குல்லே வகைக்கு $\frac{1}{4}$ பலமும் பொடித்துத் தூவிப் பசுநெய் விட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு வேளேக்கு 5 கிராம் அளவு சாப்பிட்டுவந்தால் கிராணிக்கடுப்பு நீங்கும்.

வெந்தயக் கீரையைப் பொரித்த கறியாகச் செய்து உண்டுவந்தால் மலக்கட்டைப்போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத்தரும். ஏ பி சி என்னும் உயிர்ச்சத்துக்களும் கால்சியம் சோடியம் முதலிய உடல் வளர்ச்சிக்குரிய தாதுப்பொருள்களும், குளோரின் என்னும் மூலகமும் வெந்தயக் கீரையில் அதிகம் காணப்படுகின்றன. தினந்தோறும் சாப்பிட்டுப் பாருங்கள். மலச்சிக்கல் உங்கள் பக்கத்தில் சிறிதும் அணுகமாட்டாது.

மாதவிடாய் கிரமமாக ஆகாமலும், அதிகவலியை உண் டாக்கக்கூடிய "டிஸ் மோனேரியா" என்னும் பிணியுற்றும் வருந்துவோர், கீழ்க்கண்ட முறைப்படி சாப்பிட்டு வந்தால் நிச்சயமாகக் குணம்காணலாம். 10 பலம் வெந்தயத்தை நன்ருக இடித்து 5 படி தண்ணீரில் கரைத்து $\frac{3}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சி அத்துடன் பனேவெல்லம் பலம் 12, சுக்குபலம் 1, பச்சை அரிசி மாவு பலம் 4, உளுந்து மாவு பலம் 4, நெய் பலம் 4, சேர்த்துக் கிருதபதமாகச் செய்து காலே மாலே 1கரண்டி வீதம் சாப்பிடவும். பத்தியமில்லே.

The following particulars regarding the ownership of "THIRUKOIL" the monthly newspaper published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (central) Rules. 1956.

## FORM IV

(See Rule 8)

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication. | ... | Nungambakkam, Madras-34. |
| 2. | Periodicity of Publication. | ... | Monthly. |
| 3. | Printer's name. | .. | P. G. Natarajan and N. Sarangapani, Partners, 10 & 11, Bunder Street, Madras-1. |
| | Nationality. | .. | Indian. |
| | Address. | ... | 10 & 11, Bunder Street, Madras-1. |
| 4. | Publisher's name. | ... | Thiru A. Radhakrishnan, M.A ,B.L., Commissioner, H.R. & C.E. (Admn) Department. (Ex-Officio). |
| | Nationality. | ... | Indian. |
| | Address. | ... | Nungambakkam, Madras-34. |
| 5. | Editor's name. | ... | Thiru A, Radhakrishnan. Commissioner, H.R. & C.E (Admn) Department, Madras-34. (Ex-Officio). |
| | Address. | .... | Nungambakkam, Madras-34. |
| | Nationality. | .... | Indian. |
| 6. | Name and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | | Thiru A. Radhakrishnan, M A.,B.L., Commissioner, H.R. & C.E. (Admn) Department. Madras-34. (Ex-Officio). |

I, A. Radhakrishnan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

Dated: 1—3—68.

(Sd) A. RADHAKRISHNAN,
Publisher.